149
2-74

ஸ்ரீ

திருவீணைசகாயம்

ஐந்தாம்வேதமாகிய

ஸ்ரீ மகா பாரதத்தில்.

சொர்க்காரோகணபர்வசம்பிரதாயமான

மகாவித்தமென்னும்

வைகுந்தஅம்மானை.

இஃது

திருவெண்காடு

ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

பாப்பிரமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

பவஅ — வைகாசிஸ்ரீ.

உ

ஸ்ரீராமஜெயம்.

மகாவித்தமென்னும்

வைகுந்த அம்மானை.

விநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

தக்கபுகழ்செறியுந் தருமரவர்வைகுந்தம்
புக்குபெருந்தாதைபுகலவே-மிக்க
வியமுகத்தான்பாரதத்தை மேரிகூத்தாடுங்
கயமுகத்தான்பங்கயத்தாள் காப்பு.

வெண்செந்துறை.

கரிமுகப்பிள்ளையரே கணபதியேமுன்னடவாய்
அரியதவத்துதித்த ஐங்கரனேமுன்னடவாய்
வடுதவராமல் எழுத்தாணிசாயாமல்
கோடுதவராமல் கொழுந்தோலைசாயாமல்
நாவுதவராமல் நல்லோசைதாருமையா
பாவுவழுவாமல் பரித்தெனக்குமுன்னடவாய்
சுரலில்குடியிருந்து சுரலோசைதாருமையா
மறலியணுகாமல் வரமீய்ந்துகாருமையா
வெப்பாலைக்கீழிருக்கும் சப்பாணிப்பிள்ளையரே
சப்பாணிப்பிள்ளையரே பொற்பாதம்யான்மறவேன்
பொற்பாதம்யான்மறவேன் பொன்னின்கணபதியே
தப்பாமலிக்கதைக்குத் தக்கோனேமுன்னடவாய்
பஞ்சவர்கள்தன்கதையை பட்சமுடன்யான்படிக்க
செஞ்சொல்சிவனுடைய தேவிதிருமகனே
குற்றங்கள்வாராமல் குறையொன்றும்நேராமல்
கற்றமட்டும்யான்படிக்கக் கணபதியேமுன்னடவாய்

சுப்பிரமணியர் துதி.

தேவரெல்லாம்வணங்குந் தேவர்சேனபதியே
மூவரெல்லாம்புகழும் முருகோனேமுன்னடவாய்
பூவிலயிலேறும் பூரணவடிவேலா

வள்ளிமணவாளா வந்தனக்குமுன்னடவாய்
இருத்தணிவேலரேயுன் சீர்பாதம்யான்மறவேன்
கருத்துடனேபாடக் கட்டழகர்ஐவர்கதை
பஞ்சவர்கள்தன்கதையைப் பற்பலருந்தான்படிக்க
அஞ்சலொன்றில்லாமல் அடியேனும்யான்படிக்க
எம்பிரான்முன்னடக்க என்கதையும்பின்னடக்க
தம்பிராணைவே சண்முகனேமுன்னடவாய்

சரஸ்வதிதுதி.

நாவிற்சரஸ்வதியே நான்முகன்தேவியரே
பூவிற்பிறந்தவளே பூலோகாட்சகியே
மாசற்றநீயேமே மன்னர்புகழ்விளக்கே
நேசத்துடனெனக்கு நெஞ்சிற்குடியிருப்பாய்
பஞ்சவர்கோவர்களும் பட்சமுடன்வைகுந்தம்
தஞ்சமுடனெல்லோருந் தக்ஷணமேசேர்ந்தகதை
அல்லல்மிகதீங்கி ஐவர்களுஞ்சேர்ந்தகதை
புல்லனென்வாயால் புகழ்ச்சியாய்ப்பாடுதற்கு
வல்லமகமாயி வாக்கிற்குடியிருந்து
நல்லவாக்கருள்வாய் நாவிற்சரஸ்வதியே
நித்தமுமெந்தன் நினைவிற்குடியிருந்து
பத்தியாயான்பாடப் பார்வதியேமுன்னடவாய்

ஈஸ்வரர்துதி.

ஆதிபரஞ்சுடரே அரியசிவமூரே
சீதாமணிவிளக்கே தூயவருட்கடலே
கற்கண்டேசர்க்கரையே கனிவுள்ளமுக்கனியே
சொர்க்கபதியரசே தூண்டாச்சுடரொளியே
எள்ளுக்குளெண்ணெய்போல் எங்கும்நிறைபொருளே
துள்ளுமெருதேறுந் தோன்றுதமெய்ப்பொருளே
மாயுமயனறியா வண்ணப்பரஞ்சுடரே
ஆலவிடமுண்ட ஐயனேமெய்ப்பொருளே
பாண்டவர்கள்தன்கதையைப் பகவானேயான்பாட
ஆண்டவனேநீருமெந்தன் அடியேனுடநாவில்
இடறுகள்வாராமல் இன்பமாயான்பாட
அடவாகயென்னுவில் ஐயனேநீவருவாய்
இகழ்ச்சிகள்வாராமல் இடும்பொன்றுநேராமல்
மகிழ்ச்சியாயெந்தனுக்கு மகாதேவாமுன்னடவாய்

மகாவிஷ்ணுதோத்திரம்

அண்டமளந்தவரே ஆதிநாராயணரே
தொண்டல்நிறமுள்ள கோபாலமாயவரே

கஞ்சன்வலதழித்த கார்மேகமுன்னடவாய்
செஞ்சொலசோதையுட தேவிதன்பாலகனே
எல்லையளந்தவனே இரணியனைக்கொன்றவனே
கல்லைப்பெண்ணாக்கிவைத்த கர்த்தாவேமுன்னடவாய்
வெண்ணெய்திருடியே மிகவிடைச்சிகையாலே
வண்ணமுடனுதையுண்ட மாயவனேமுன்னடவாய்
பாண்டவர்க்குத்தூதுபோன பகவானேமுன்னடவாய்
ஆண்டவனேயிக்கதைக்கு அருள்புரியவேண்டுமையா

கதையின்வரலாறு.

காராளனமாமுகனே கணபதியேகாப்பாக
சீராளமாமுகனே செல்வனேமுன்னடவாய்
எத்தன்குருவாழ்க ஏரம்பாமுன்னடவாய்
தத்திமுகத்தோனே தற்பரனேமுன்னடவாய்
அத்திமதிசூடும் அரனார்திருமகனே
வந்துதவிசெய்வாய் மாபாரதக்கதைக்கு
முற்றுபரமேசுரனார் மொழிந்தவசனமிது
இப்புவியிலுள்ளோ ரெழுதிப்படிப்பதற்கு
செட்புடனேன்லட்சுமியாள் சீதேவியுமாக
ஞானமதில்மெய்ஞ்ஞானம் நாளும்பரமபதம்
வாலசரச்சோதிநிதம் வந்திருந்துகூத்தாட
மகாபாரதக்கதையை வகுத்துரைத்தசாஸ்திரத்தில்
ஆகாதகேடன் அனியாயநிஷ்டூரன்
மாபாவிசெய்த வஞ்சமெல்லாம்பொறுத்து
பூபாலரைவர் பொருந்துந்துரியோதனனும்
வென்றும்புவியாண்டு விஷ்ணுபதஞ்சேர்ந்தகதை
ஒன்றுமறியாதான் உரைத்தேன்புவிமீதில்
பெரியோர்பொறுத்தருளும் பிள்ளையிவனெனவே
தெரியாதான்சொன்னமொழி செந்தமிழோர்தான்பொறுப்பீர்
பாவாணர்பாதம் பணிந்துநமஸ்கரித்து
நாவாணர்சீர்பாதம் நமஸ்கரித்துநாள்தோறும்
சொல்லுகிறேனம்மானை துதிக்கைத்துணையாக
செல்லுகிறஞானமெனச் செப்புகிறேனம்மானை
வெல்லுகிறகாலமென்ன வேந்தன்துணையாயிருந்து
சீரார்புவிவாழ்க திசைகளெட்டுந்தான்வாழ்க
பாரார்புகழ்தமிழ்சேர் பாவாணர்தான்வாழ்க
திங்கள்மும்மாரி சிறந்துமிகப்பொழிய
பொங்குபுகழ்காவேரி பொய்யாமலெந்நாளும்

தேசஞ்செழித்துவரச் செங்கோல்தழைத்தோங்க
ராஜன்புவியாள நற்றவங்களுண்டாக
தேவாலயம்விளங்க திருப்பணிகளுண்டாக
மூவர்முதலான முப்பத்துமுக்கோடி
தேர்களும்வாழ்க செங்கதிரோன்றுன்வாழ்க
நாராயணன்வாழ்க நான்மறையுந்தான்வாழ்க
தாரார்தவத்தோர் தபோதனருந்தான்வாழ்க
பஞ்சாக்ஷரமும் பகமோரெட்டெழுத்தும்
துஞ்சாமலெந்நாளுந் துதிப்போர்மிகவாழ்க
வீறுதிருநாமமுடன் வெண்ணீறுமுண்டாக
கூறுமுபதேசம் குன்றுமலைத்தாளும்
நன்றாய்ச்சிவன்றனையும் நாராயணன்றனையும்
ஒன்றாகக்காண்போர் உலகில்மிகவாழ்க
நல்லோருமிப்புவியில் நாட்டில்மிகவாழ்க
இல்லோருமுள்ளோரு மெளியோர்வலியோரும்
எண்ணரியஸ்ரீரங்க ராமருடதன்சீஷன்
மண்ணுலகில்வெங்கியருள் வடவாண்மனமகிழ்ந்து
அல்லலறவே அருவினைகள்தானறவே
சொல்லியவைகுந்தகதை சொல்லுறவேயான்பாட
தண்ணளிசேர்வீதியிலே தழைத்தாவின்கீழிருக்குங்கும்
விண்ணவர்கள்போற்றும் விநாயகனேமுன்னடவாய்
தோராதகூனையும் துலியாக்கிவஞ்சமதை
வேரோடறுத்தெரியும் வேலவனேமுன்னடவாய்
துவரநிடையாளே சொற்கலக்கும்வல்லவனே
தவளநிறத்தாளே சகலவிதேவாக்கருள்வாய்
தெரியுங்கலைபகருஞ் செந்தமிழோர்கள்முன்னே
அரியவைகுந்தகதை அம்மானைசொல்வதற்கு
வரிசைபெறும்வையகத்தில் மாரிபொழிவதுபோல்
பேச்சறியாப்பிள்ளை புலம்புகிறேன்வாய்திறந்து
காவிற்குயில்கூவ கண்டேயதம்பினையாய்
கூவிக்குளறுமந்த கூகையொக்கும்அம்மானை
ஆகவாயானுரைத்த அம்மானைதன்னிலொரு
ஏதுபிழைவந்தாலும் என்னைநிஞ்சொல்லாமல்
வாசமுள்ளபாடலென்று மாநிலத்தோர்கொண்டாட
நேசமுடனேபெரியோர் நித்தைமிகச்சொல்லாமல்
சிந்தைமகிழ்ந்துகொள்வீர் கிறியேனுரைத்ததமிழ்
சந்தையங்கள்சொல்லாமல் தாரணியிலுள்ளோர்கள்
விண்ணவர்கள்போற்றும் விநாயகனேமுன்னடவாய்

ஆசையுடன்படித்து அன்புவைத்துகேட்டவர்கள்
ஓசையுடன்வாழ்த்து உகத்திருப்பார்கண்டீரே
ஆறுமுகவன்றனையாய் அவையடக்கம்போகேனே
பூருவமுள்ள புலனும்வெளியாகி
வையகத்தோர்கேட்க வாழ்த்துகிரேனிக்கதையை
சீர்ப்படனைகள்செய்தறியார் தருமருத்தப்பியரும்
அத்திபுரிதகரம் ஆளுகின்றதாளையிலே
புத்தியுள்ளபஞ்சவரும் பாரளத்தமாயவரும்
தீதிமறவாமல் நெடுநாட்புவியாண்டு
ஆதிமகாவிஷ்ணுபதம் ஐவருமேசேர்த்தகதை
காலதுவாபரம்போய் கலியுசமும்வந்தகிலல்
சாலவேகோபாலர் சங்கையல்லவென்றுசொல்லி
உய்வதுக்குநல்ல உபாயமனதிலெண்ணி
சீருடனேவைகுந்தஞ் சேரவென்றுசம்மதித்து
நாருடனேபூவும் நன்றுகச்சேர்ந்ததுபோய்
பஞ்சவர்களைவரையும் பட்சமுடனிப்பொழுது
தஞ்சமுடன்மாயன் தன்னிதம்போலாக்கிவைக்க
சிந்தைதனிலெண்ணித் திருமால்மனமகிழ்ந்து
வித்தையாயிக்கதையை மேதினியோர்தாம்துதிக்க
அம்மானேயென்று அரியவைகுந்தகதை
இம்மாநிலத்தோ ரெழுதிப்படிப்பவர்க்கு
வாக்கருளிச்செய்த வடவான்மொழிந்தகதை
பார்க்கவிருத்தமொன்று பாடவேயிக்கதையை
சருக்கமாய்ப்பாடினதை தோற்றமுடனேதெரிந்து
பெருக்கவிரிவுசெய்து பெருமான்பதம்போற்றி
ஒன்றுபத்துநூறாய் ஒன்றுநூறுயிரமாம்
என்றுமுத்திசித்தி யிதுவேபொருளாக
திருத்தமுடனிக்கதையைச் சிறப்பாகச்சீருடனே
விருத்தமுடன்கொச்சகமும் விபரிதமாய்த்தான்பாடி
பூலோகமெல்லாம் புதுமையெனக்கொண்டாட
மாலோனுதவிசெய்வார் வைகுந்தமென்பவர்க்கு
மெய்கண்டவேத வியாசர்மொழிந்தகதை
வைகுந்தஅம்மானை மகாபாரதமுடித்து
குருகுலத்திலுள்ள கொற்றவர்கள்நூற்றொருபேர்
போர்க்களத்தில்மாண்டு போனபின்புபஞ்சவர்கள்
தருமதுரையுர் தப்பியருர்தானிருந்து
வாழ்ந்தகதையு மற்றுமுள்ளோர்தன்கதையும்
தாழ்ந்தகலிவருமுன் தங்களிலேதால்தெரிந்து

காணமுகிவண்ணன் கண்ணாருளாலே
வாளபிமனீன்ற மன்னன்பரிசித்துவுக்கு
பட்டந்தரித்து பாராளவைத்தருவும்
நட்டந்தச்செங்கோல் நடத்துர்திறமறித்து
தேசம்விட்டுவைகுந்தஞ் சேரவென்றுசம்மதித்து
வாசமுள்ளபஞ்சவர்கள் வைகுந்தஞ்சேர்த்தகதை
நடந்தகதைசொல்ல நாரணரேகாப்பாமே

விருத்தம்

ஓங்குருவாழ்கவென்று உலகெலாமகிழ்ந்தீக்கி
பாங்குடனேந்துபேரும் பத்தினிதுரோபதியும்
ஈங்குள்ளகருமமெல்லா மெள்ளளவாசையற்று
தீங்கிதுசெகமென்றெண்ணி திறவிலேநடந்தருளாயம் (க)
மண்ணுள்ளோர்வாழ்கவென்று மற்றுள்ளதேவர்சூழவர்
விண்ணுள்ளோர்வாழ்கவென்று மேதினிமுனிவர்ஞானம்
அண்ணுள்ளோர்திருமால்பாத மைவருஞ்சேரவென்று
கண்ணுள்ளோர்வாழ்கவென்றுகலிமகள்காப்பதாமே (உ)

கதை

சொல்லுகிறேனல்ல சோமலிங்கர்தாள்போற்றி
வெல்லுகிறகாலம் வெகுளியினதான்மையிலை
வைகைநதியான வாள்விளையம்பதியான்
மெய்க்கமலம்பத்தி விபூதிபஞ்சாட்சரத்தான்
எளியோர்வலியோர்க்கு எழைபிவனெனவே
தெளிவோர்க்கடிபணிந்து தீஷிரில்சீஷனுமாய்
வணங்கிநமஸ்கரித்து வாழ்த்துகின்றரம்மானை
அணங்கினுடன்சீர்பாதம் ஆறுமலிப்போது
கூறுந்தமிழுடைய குருகுலத்திற்பஞ்சவர்கள்
பேருந்தவமும் பெருமைகளுமுண்டாக
சொன்னதமிழ்ப்பெருக சொன்னதுவேயம்மானை
அன்னமெனுமீனாட்சி யம்மாள்துணையெனவே
விரித்துநான்சொல்லுகிறேன் மேதினியோர்தான்கேழ்க்க
கிரித்துப்பழியாமல் சித்தமேதான்பொறுத்து
ஆரும்பெரியோ ரடியேனுரைத்ததமிழ்
கேழ்ப்பாய்வைகுந்தகதை திருவையுடனேயிருந்து
பஞ்சவர்கள் அத்திபுரத்தை அரசுசெய்தது
இன்னுளளவும் இகத்திலிருந்தபடி
முன்னுளிற்பஞ்சவர்கள் மூர்க்கமுடனேயிருந்து
வேதமறவாமல் வேதியரும்பூசரரும்
நாதமணிகீதம் நற்சங்குதானமுடன்

வேள்விகளோமம் மிகுத்தபுராணகதை
கேள்விவிவகதைகள் கீர்த்தனங்கள்தான்முழங்க
நீதிநடுஞாயம் நெறிமுறைமைதப்பாமல்
ஆதிமகாவிஷ்ணுபதம் ஐவருமேபோற்றிசெய்து
மந்திரிமார்சூழ்ந்திருக்க மகுடமுடிவேந்தருடன்
தந்திரிமார்வந்திருக்க தார்வேந்தர்காத்திருக்க
அந்தணரும்வேதியரும் ஆனதபோதனரும்
செந்தமிழ்சேர்வாணர்களுந் தேவரிஷிமாதர்களும்
அன்னசொன்னதானம் அறமேபெரிதாகி
மன்னர்தங்கள்செங்கோல் வாழுமனுநீதி
வழுவாதசெல்வ மனுநீதிதப்பாமல்
தழுவாதசொல்லும் தான்தோறுந்தப்பாமல்
பூமிசெழித்துவரப்புவிராஜன்வாழ்ந்திருக்க
சாமிதிருமால் சகாயமனதிலெண்ணி
சேனைரதகெஜங்கள் திக்கெங்குஞ்சூழ்ந்துநிற்க
ஆனையின்மேல்முரசு அதிரப்பரிவாரம்
சங்கீதராகம் சகலகலைமுழங்க

இக்கிதமாய்நாளு மிடைபூறுவாராமல்
கோத்திரங்களெல்லாங் குபேரனைப்போல்வாழ்ந்திருக்க
பார்த்திருந்ததர்மர் பஞ்சவர்கள்தன்னுடனே
மக்கன்மனவிசுற்ற மகிழ்ந்துசிலகாலம்
திக்கெங்கும்போற்றித் திசைகளெட்டுத்தானதிர
ஆளுகின்றரத்திபுர மசையாய்யணிதரித்து

அபிமன்னனுக்குப் பிள்ளைபிறந்தது.

வாழுகின்றநாளில் வாளபிமன்றன்தேவி
சந்தரியுங்கர்ப்பமுடன் தோற்றமுடனேயிருந்து
மைந்தனையுமீன்றாள் மாணிக்கம்போலவேதான்
குழந்தைபிறந்துதென்று கொற்றவர்கள்தான்மகிழ்ந்து
வாழ்ந்தாராமனமகிழ்ந்து வாய்த்துதென்றுஐவருமே
நில்லொன்றுமாகித் தேமாங்கனிபோலே
பூரித்துநாள்தோறும் பொன்போல்வளர்க்கலுற்றார்
பாரித்துப்புத்திரனும் பருவமதாய்த்தான்றேறி
அன்னைமுகம்பார்த்து ஆஹாவெனக்குளறி
தத்திவிளையாடித் தாவித்தவிழ்ந்திடுவான்
வெற்றிவிசையன் மிகமகிழ்ந்துபேரனுக்கு
தண்டைசிலம்பு சதங்கையுடன்தான்பூட்டி
வண்டையும்மும்வச்சிரமணி விதவிதமாய்த்தான்பூட்டி
பூணைமுப்பூட்டிப் பொன்னுலலங்கரித்து

வாசமுள்ளவாளபிமன் மைந்தனுக்குப்பூஷணங்கள்
பூட்டியலங்கரித்து பூஷணங்களுள்ளதெல்லாம்
தேடரியவில்வித்தையன் சித்தமகிழ்ந்திருத்தான்
தும்பியழுதிடுமாஞ் சொல்லும்பயின்றிடுமாம்
அம்புலியைவாவென்று ஆணையசைத்தாடி
செங்கீரையாடிச் சிலகாலத்தாணடி
வங்காரமுத்தமொடு மருவியதோர்கப்பாணி
சித்திரிவினையாடிச் சிறுதேருத்தானுருட்டி
முத்தியொருவயது முழுதும்பருவமதாய்
தத்தடியுமிட்டுத் தம்பியிலனுமெனவே
பத்தடியுமிட்டுப் பருவமொருவயதாய்
தெரிந்துமிகப்பஞ்சவர்கள் சித்தமகிழ்ந்திருந்தார்
மூன்றுவயதாகி முலைமறந்துவீதிசற்றி
ஊன்றுஞ்சிறுகோலும் உண்டைவில்லுந்தான்பிடித்து
நாலுவயதாகி நடையுடையும்பாவனையும்
ஐந்துவயதாகி ஆணைதமேறி
கொஞ்சும்பறியேறிக் கொற்றவனும்வித்தைகற்று
ஆறுவயதாகி யாடைவெகுபூஷணமும்
தீறும்பூணைந்து தெடியோனெஞ்சில்வைத்து
ஆசானடிபணிந்து அரியெலம்புங்கற்று
ராசாதிராசனென்று நாற்றிசையும்கொண்டாட
வில்வித்தைசாஸ்திரமும் விதவிதமாய்த்தான்படிந்து
கல்வித்தமிழறிபக் கட்டழகன்வேணுமென்று
எழாம்வயதில் எழுத்தறிந்தானுதற்கு
வாளபிமன்னன் மகனுப்படித்திடவே
ஆதிகுருவிடத்தில் ஐவருமேசதிசொல்லி

அபிமன்னன்பிளையைவர்கூடிப்பள்ளியில்வைத்து
ஒதிவிக்கவேணுமென்று ஓப்பிவித்தாரம்மானே
அரிவோமென்றட்சரத்தை அரியோன்தன்போலுக்கு
தெரியப்படித்திச் சித்திரிபும்பேரியும்
எழுத்தினுடஅட்சரமு மெல்லாம்படித்தெழுதி
அழுத்தமுடனின்ற ஐம்பத்தோரட்சரமும்
படித்துவிரவில் பலநூலுந்தானறிந்து
வகுத்தநிதமிழால் வகையாகவேதெரிந்து
ஆகமதுபழுதில் அவையடக்கமுள்ளதெல்லாம்
பேசுதமிழ்பலவும் பிரியமுடன்தான்படித்து
துலங்குபுகழ்நாகரமுஞ் சொல்லவேதான்படிந்து
காவ்வேதசாஸ்திரமும் தயனகுறிப்பாஷைகளும்

மால்பேரன் தான்படித்து வயதுமோரெட்டாகி
தனுசாஸ்திரம்படித்து தரணியெல்லாமகிழ
மநுவிக்கியானம்நீதி மனுவந்திவித்தைகளும்
பாஷிபதினெட்டும் பரிசித்துத்தான்படித்து
ஓசைபெறத்தேசம் உலகெங்குந்தான்மகிழ
நல்லவித்தைகத்திருந்தான் நாராயணன்பேரன்
செல்வவித்தைகற்றுச் சிறுவனுடன்தான்கூடி

பரிச்சித்து வேட்டைபோடப்போகிறது

தான்வேட்டையாடவென்று தானைபிரிவீரருடன்
கான்வேட்டையாடிக் காடுதிசையெறித்து
வாலைகளாய்க்கூடி வனம்படைத்துதாவிடவும்
சோலைகளுங்காவுகளுஞ் சுனைபும்பலைபலவும்
ஓடிவிளையாடி உயர்ந்தமலைதானேறி
தேடிக்கரடிபுலிச் சிங்கங்களாளியுடன்
மான்மறைகள்புலிவாய் வராகத்தான்வதைத்தீதுவும்
மேன்மையுள்ளதேனும் விஷித்தாறுநதிகளியும்
வாழைப்பழமும் வருக்கைபீபுலாக்கனியும்
விளையாடிப்பாலர் வெருளிமிகவாகி
இளையாமற்சற்றும் இன்னதென்றும்பாராமல்
காடுகலைத்துக் கடுகமலையேறி
ஓடுகிறபாம்பை உயிரைவலித்தெய்து
ஆட்டிவிளையாடி அலைக்கறித்துநாகமதை
கோட்டிமிகப்பண்ணி கொன்றுருயிர்தனையும்
நாகமீதுசெத்ததையும் நலமாகவேகிடத்தி
வேகமுடனவ்வனத்தில் விளையாடிப்பாலர்களும்
அங்கேசடைமுனியும் ஆனதவமுனியும்
எங்கேசிவன்பாதம் என்றைக்குக்காண்போமென்று
இருகைவிரித்து இருந்தார்சிவயோகி
அருகேகிறுவர் அவர்செயலைப்பாராமல்
சுடரில்விழும்விட்டிலைப்போல் துன்பமிகநினைந்து
இடருவருமென்று எண்ணமதுதோற்றுமல்
நையாண்டிபண்ணி நகைத்துவிளையாடி
ஐயாண்டியாரு மென்று அரவையெடித்துவந்து
கேடுவரும்போது கெடுமதிகள்தோற்றுமல்
பாடுவருமென்று பரிசித்தறியாமல்
ஏதுவருமென்று எண்ணியவன்பாராமல்

மகாவித்தமென்னும்

தீதுவினைதன்னைச் சிறுவனறியாமல்
சார்ப்பத்தைத்தானெடுத்து சந்நியாசிதன்சமுத்தில்
உற்பத்திதானுனக்கு உடைடமையிதுவென்றுணர்ந்தார்
கண்டந்தமாமுனியுங் கண்கள்பொறிபறக்க
விண்டந்தக்கோபம் வெளியிலேகோரமதாய்
எண்டாசிறுபயலே என்மீதிற்பாம்பதனை
வேண்டாதார்போலே விடவரவைப்போட்டாயே
தீண்டாதோஉன்னைச் சிறும்பெரியரவும்
ஆலுனக்கு அரவால்மரணமென்று
ஞானபரனை ஞானமுனிசாபமிட்டார்
சொன்னமுனிசாபந் துடைக்கஅறியாமல்
என்னமோவென்று எகினர்காணம்மானை
தன்னிகரில்லாதொரு தனஞ்செயனுர்தன்பேரன்
சென்னைகவிழ்த்து சிறுவருடன்தான்கூடி
அத்திபுரம்நோக்கி ஆணியம்விட்டகன்று
வெற்றிமிகப்பேசி விளையாடிக்கொக்கரித்து
பட்டணஞ்சேர்ந்து பரிச்சித்துவந்திருந்தார்
அட்டதி சுமும் ஐவர்மிகமகிழ்ந்து
வில்லெடுக்கானில் வேட்டைபோய்வந்ததுவும்
சொல்லெடுத்தான்பேரன் சூரனிவனெனவே
அங்கங்குளிர்ந்து அன்புமிகப்பேசி
தாடந்தெளிந்துஐவர் தங்களிலேசம்மதித்து
நன்மைசெய்பஞாயம் நமக்கேபலித்துதென்று

பரிச்சித்துவுக்குக் கலியாணஞ்செய்கிறது;

சிந்தைமகிழ்ந்து சிறுவன்மேலன்புவைத்து
கன்னிகலியாணங் காணினியோர்தாமறிய
சீராகஐவர் சிறப்பாகப்பேரனுக்கு
நேராகநாள்முகூர்த்தம் நிட்சயதாம்பூலமிட
வேதியரைத்தானழைத்து வேண்டுமுகூர்த்தமிட
ஆதிநாராயணரை ஐவரும்போய்த்தண்டனிட்டார்
சுந்தரிதன்மைந்தனுக்குச் சோபனமுந்தான்முடிக்க
சுந்தரமுமின்னதென்று சாற்றுவீரெம்பெருமாள்
அழகுதிருமேனியனே அபிமன்னன்மைந்தனுக்கு
களபமுகில்மேனியனே கல்யாணந்தான்முடிய
வகையேதெனக்கு மாயோனேசெய்யுமென்றார்
தொகைவகையும்ஐவர்க்கு தோற்றமுடனேநினைந்து
நால்வகையும்பார்த்து நாராயணர்தாமும்

ல்போலும்வங்கிஷத்தில் பண்பானகோத்திரத்தில்
ன்னபடியென்று இதவாகச்சம்மதித்து
சொன்னதொருமாயோனைத் தொழுதுமிகப்பணிந்து
சாத்தகியாழ்வார் தானீன்றமைந்தனெனும்
த்தத்துளசி மகாராஜன்ஈன்றெடுத்த
செல்வியென்னும்பூமடந்தை சிறியாளைமாலேயிட
தில்லவிஷ்யமென்று தாணைசாப்பெண்கேட்க
தாடிநடந்தார்கள் நல்லதொருபஞ்சவர்கள்
தேடித்துவாரபுரிதனிலேசென்றுபுக்கி
கண்டார்கள்மாயவன் கமலமலர்பாதமதில்
தெண்டனிட்டுவாய்புதைத்துச் செப்பினரம்மானை
அந்தமொழிகேட்டு ஆமென்றுகோபாலர்
சந்தோஷமாகச் சாத்தகியேவாவெனவே
உன்னுடையமைந்தன் உற்றதுளசியவன்
தன்னுடையதன்மகளைத் தனஞ்சயன்போலுக்கு
பூமடந்தையென்னும் பொற்கொடியேயிப்போது
தாமனபிமன்னன் தன்னுடையமைத்தனுக்கு
மாலையிட்டுநன்றாய் மணஞ்செய்யுமென்றுசொல்லி
சேலைபஞ்சஞ் செலுத்துமென்றுஐவரையும்
மாயனுரைக்க மன்னவர்களைமனவே
ஞாயதொருமூகூர்த்தஞ் சொல்லுமென்றார்வேதியனை
கேட்டுஒருதினத்தில் கிருடையுடனெல்லோரும்
நீட்டுபுகழைவர் கிருமாலிடந்தனிலே
கொண்டுவந்துவைத்தார்கள் சுடரையொடுபரிசம்
கண்டுமகிழ்ந்து காயாம்புமேனியனும்
பாக்கியமாமெனவே பச்சைமால்கொண்டாடி
வாக்கியமுஞ்சொல்லி மகிழ்ந்துதான்பஞ்சவர்கள்
நின்றவரைப்பார்த்து நெடியோன்மனமகிழ்ந்து
நன்றெனவேயிப்போது நாட்டுமச்சாணியென்றுச்
செய்யுஞ்சடங்குஞ் சிறப்பாகச்செய்யுமென்றார்
ஆயன்திருமால் அருளினர்காணம்மானை
அந்தமொழிகேட்டு ஆமென்றுபஞ்சவர்கள்
விந்தைமலர்ப்பாதமதில் விழுந்துநமஸ்கரித்து
வந்தார்களத்திப்புரம் வண்ணமணிமண்டபத்தில்
சந்தோஷமாகச் சகலரையுந்தானழைத்து
அத்திபுரத்திலுள்ள அன்னசத்தவங்ஷமும்
சித்திவிநாயகனைத் தெரிசித்தடிபணிந்து
மூலப்பொருளே மூர்க்கமுள்ளஜாவே
ஞாலப்பொருளே நமஸ்கரித்துதான்தொழுது

பாலனெங்கள்மைத்தன் பரிசித்துவுத்தனுக்கு
காலபலமாயிருந்து கலியாணத்தான்முடித்து
முன்னிற்கவேண்டுமையா முக்கணனுர்புத்திரனே
சென்னிக்குள்நின்ற சிரோமணியேமுன்னடவாய்
என்று துதிசெய்து இறையோனைத்தோத்தரித்து
சென்றுநகரில் சிறப்பானபட்டணத்தில்
வான்கமுகுநாட்டி வாழைமிகப்பத்தலிட்டு
தேங்காளிளநீர் தேன்கரும்புதானிரப்பி
வாழைக்கனியுடனே வாழைமரத்தானுன்றி
தாழைமடைமல்லிகைப்பூச் சரமாரியாய்நிரைத்து
பட்டாலலங்கரித்து பட்டமேல்தட்டிகட்டி
வட்டாரஞ்சூழ மாணிக்கமாலையிட்டு
கூடமலங்கரித்துக் கோபுரம்பாவினையும்
தெருவீதியெல்லாஞ் சித்திரங்கள்தானெழுதி
சாந்துபுனுகுநல்ல சவ்வாதுகஸ்தூரி
வந்தும்பரிமளங்கள் வெங்குங்கமகமென
வாசமுள்ளதெல்லாம் வகைவகையாய்த்தானிரைத்து
தேசம்புகழத் தெய்வலோகம்போலே
வைகுந்தம்போலே வயிரவயிடேரியத்தால்
செய்கின்றுரைவர் திருமால்மணமகிழ
மருவுமலரும் மருக்கொழுந்துவாசனையும்
தாருமுகூர்த்தம் நல்முகூர்த்தவேளையிலே
வாழுமரசாணிய தும் மாணிக்கத்தூணுட்டி
அன்னசுற்றமெல்லாம் அலங்காரமாய்க்கூடி
தென்னவர்கள்மன்னவர்கள் தேசத்திலுள்ளாரும்
திக்கிலுள்ளதோத்திரமும் சிறப்பாகத்தான்கூடி
முக்கியமாய்க்கல்யாண முடிக்கவேவந்தார்கள்
வந்ததொருமன்னர் மகுடமுடிவேந்தரையும்
பந்திபந்தியாகப் பாவாணர்தேமுடன்
ஆனையொருகோடி அஸ்வமொருகோடி
தேனையொருகோடி தேருமிருகோடி
சங்கதவீணை தவின்முரசுமல்லாரி
எங்குமுழங்க எக்காளம்பூரிகையும்
பேரிகைமத்தளமும் பேசுங்கிடிமிடியும்
வாரியொலியிட்டதுபோல் வானமுழக்கமுடன்
இத்திநவரி இருச்சின்னந்தாரையுடன்
சத்திக்குமேகமென்ன தம்புருவங்கின்னரியும்
மூவர்முதலான முப்பத்துமுக்கோடி
தேவர்கள்மாதரசும் ஜெயசோபனமுழங்க

மங்களமும்பாடி மஹாயோகிகள்தான்றுதிக்க
சிங்காசனத்தில் திருமாலுவந்திருக்க
மாப்பிள்ளைக்கோலமிட்டு மாலிகையுர்தான்புகுந்து
மூப்புமார்தாதியர்கள் மொய்குழற்குப்பட்டுடுத்தி
ஆடையுடுத்தி ஆபரணந்தான்பூட்டி
வாட்பரிமளங்கள் வாசனையால்தான்பூசி
காலுக்குமிஞ்சியிட்டுக் கடிக்கன்சவளியிட்டு
கோலச்சரப்பணியுங் கொத்துமுத்துத்தாழ்வடமும்
வேடிக்கையாக விஜையனிடபேரனுக்கு
சோடித்தார்வேணதெல்லாம் சொர்ணமயமாக
நாராயணர்பேரன் ராஜாதிராஜனுக்கு
ரோகநால்வகையுந் தெரிந்துநல்லபூஷணங்கள்
அரிசித்தமேமகிழ்ந்து அன்பானபேரனுக்கு
பரிச்சித்துவேந்தனுக்குப் பலபணியுந்தான்பூட்டி
துளசிமகாராஜன் துய்யதொருபெண்கொடிக்கு
வஸ்யல்தரித்து வர்ணமிகப்பட்டுடுத்தி
பொன்னலலங்கரித்து பிறைபோலமையெழுதி
தேனுரும்பிச்சிமுல்லை செண்பகப்பூவாசமிட்டு
மாப்பிளையும்பெண்ணும் மதனுமரதிபோலே
சீப்பிட்டுமையெழுதி சித்திரம்போல்பொட்டுமிட்டு
வைத்துமகிழ்ந்து வத்துசொன்னர்மாயரிடம்
மாயவனும்ஐவருமே வந்துமந்தப்புந்தலின்கீழ்
தாயானகுந்தியம்மாள் தேவிதனையழைத்து
உன்பேரனம்மா உத்தமபிமனிட
நன்பாலன்வீர சுமர்த்தன்பரிச்சித்துவுக்கு
சுபசோபனமுடித்துத் தோகையரைநீபார்க்க
வேணுமிருமென்று விளம்பினர்பஞ்சவர்கள்
பூணுமெனவேயிருந்து பொற்கொடியாள்தான்மகிழ்ந்து
புகழ்பெரியதாயார் பொற்கோவில்சென்றுபுக்கி
திகழும்நவசரமே திவ்வியமேமாதாவே
கற்புடையமாதாவே காந்தாரித்தாயாரே
மைப்பிடைவேள்வாளபிமன் மைந்தன்பரிசித்துவுச்சு
அகலாதிருந்து அபிமனுடபுத்திரற்கு
சகலோகமெய்க்கச் செய்புங்கலியாணம்
மகாதேவர்தன்னருளால் வருந்திமுடிப்பதற்கு
தாயாரேதீயுந் தருமருடனிருந்து
செல்வக்கலியாணஞ் செய்விக்கவேண்டுமென்றார்
சொன்னவுடன்காந்தாரி தோகையரும்ஆமென்றே
அன்னம்போல்தானடந்து ஐவருடனேகூடி

நல்லதென்றுபந்தலின்கீழ் நடுவேதான்வந்துநின்றாள்
செல்வக்கலியாணம் திருமால்தன்பேரனுக்கு
மணமுடிக்கவேணுமென்று மாயோனைமுந்தருளி
மணவரையிற்சென்று மாப்பிள்ளையைக்கைப்பிடித்து
கெண்டிதீர்வாங்கிக் கெம்பிரமாய்ப்போனக்கு
வண்டானமார்பன் மாயோன்மனமகிழ்ந்து
மணையவலமாய்வந்து மகிழ்ந்துமணையேற்றி
இணையாகப்பெண்தனையும் இப்படியேகூட்டிவைத்து
நேரோமணமேற்றி நிண்ணயமாயுள்ளதெல்லாம்
செய்துமுடித்துச் சிறப்பாகப்பந்தலின்கீழ்
பைங்கொடிக்குமாப்பிள்ளைக்கும் பாங்குடனேநற்சடங்கு
காத்திரத்திலுள்ள சடங்குமுழுந்தபின்பு
கோத்திரங்கள்சூழக் குறைவைமுழுக்கமிட்டு
பூணாரதமேறி அலங்காரமாய்வரவே
சேணாதளத்துடனே தெருவீதிசுற்றிவந்து
மங்கிலியந்தான்றரிக்க வரவேணுமென்றுசொல்லி
இங்கிதமாபானையின்மேல் ஏற்றினார்மாப்பிள்ளையை
கன்னியுந்தேரேறிக் கணவனுடன்தான்வரவே
இரவுபகலாகி இந்திரன்றன்பட்டணம்போய்
அரவுயர்த்தோன்பட்டணந்தான் அடங்கலுஞ்செயசெயென
வானமெரிய வானத்தின்மீன்போல
கானவந்துநிற்பாருங் கண்மெகிழ்வாரும்
இந்திரனேவென்பாரும் இறையவனேவென்பாரும்
சந்திரனேவென்பாருஞ் சரணங்காணென்பாரும்
மன்மதனேவென்பாருங் மார்க்கண்டனென்பாரும்
தருமர்குலத்துதித்த தார்வேந்தனென்பாரும்
பூவானமெங்கும் பூமலர்போல்தானெரிய
பாவாணர்ராகம் படித்துவரச்சங்கீதம்
பட்டணத்திலுள்ள பலபேருந்தான்பார்த்து
கட்டழகன்தானிவரைக் கட்டழகைப்பாருமென்று
வீதிசுத்தித்தானிவரான் வீமனுடதன்பேரன்
ஆதிவஸ்துவான அர்ச்சுனருந்தன்பேரன்
கோட்டையும்பட்டணமுங் குதிரைதளத்துடனே
நாட்டையுஞ்சுத்தி நகரிவலமாக
வந்துமணப்பந்தலின்கீழ் மாப்பிளையும்பெண்ணுடனே
மாயனருளாலே வந்தாராமணவையில்
ஆயனுடனேவர் அருகிருந்துவேதியரை
சாமத்துக்குள்ளாகத் தாலிகட்டவேணுமென்று
ஓமம்வளர்க்கவென்று உத்தாரம்பண்ணினார்கள்

கும்பமுடன்மாவிலையும் குசப்புல்லும்தூவுடனே
இன்பமுடன்சோடித்து இருந்தார்கள்வேதியர்கள்
அக்கினியும்நெய்யும் ஆர்ப்பரித்துமேற்புகைய
முக்கியமாயெங்கும் மூலமுதற்பொருளாய்
வைகுந்தமூர்த்தி யவர்தான் துணையெனவே
தேங்காயுடைத்துச் சித்திவிநாயகர்

பரிச்சித்துமங்கிலியத்தரித்தது:

பாங்குடனேவைத்துப் பரிசித்துவேந்தனுக்கு
ஈங்கனமுங்கட்டி கன்னிக்குகாப்புமிட்டு
வங்கணமாய்ப்பெண்கழுத்தில் மங்கிலியத்தான்தரிக்க
சந்தனமும்பூசித் தானிருந்தாரம்மானே
தெய்வபிராணருந் தேவர்களுஞ்சாட்சியதாய்
ஐவருமேதொட்டு அபிமனுடபுத்திரற்கு
கண்ணீர்திருக்கரத்தால் கற்பித்தார்மங்கிலியம்
விண்ணவர்கள்வாழிசொல்ல விரைவாகத்தான்வணங்கி
தரித்தானேமங்கிலியம் தையனல்லாள்தன்கழுத்தில்
பரிசேதருடைய பரிச்சித்துமன்னவனும்
வேதமுழங்க வெண்கவரிதான்வீச
நாதமுழங்கிவர நகரிமிகமுழங்க
செயஞ்செயமென்று சேவைகளுந்தானிரைக்க
ஆயனுடமாமுனிவர் அட்சதையுந்தான்கொடுக்க
மங்களமும்பாடி வாழ்த்திச்சரச்சோதி
இங்கள்முகவாணர் செபசோபனமுழங்க
சோபனமுஞ்சொல்லி துடியிடையுமாப்பினையுந்
தாபமுடன்கைகோர்த்துத் தங்களென்னசுத்தமுடனே
பண்ணினுர்கோபாலர் பரிச்சித்துவேந்தனுக்கு
நன்னிலுர்கண்ணர் நடவுமென்றுசைபிடித்து
கணவருடன்பொற்செ[illegible]பக்கைகோத்துதான்கொடுத்து
மணவரையிற்போ[illegible]மாயோனுதவிசெய்ய
அந்தநாள்சென்று அலர்க்திரோன்வந்துதித்தான்
நந்திகோபாலர் நரசிங்கமாமூர்த்தி
மற்றுநாள்தாமு மஞ்சணீராடுமென்றுர்
அத்தினுர்பொற்படிக்கு மஞ்சணீர்தானிடி
மாப்பினையும்பெண்ணும் வாழ்ந்திருந்தாரம்மானே
சூப்பியுள்ளவங்கியமுங் முன்னேருரும்பின்னேருரும்
அல்லியுந்தாமரைபோல் அன்னசுத்தமுள்ளதெல்லாம்
துல்லியமாய்வாழ்ந்து சுகமேயிருந்தார்கள்

தர்மருந்தம்பியரும் தாரணியையாண்டிருந்தார்
நன்மைவளர நாற்றிசையுந்தான்வாழ்க
துன்மையகலத் தேசத்தழைத்தோங்க
கர்மமகலக் காவேரிபொங்கிவர
கன்னல்விளைந்து கனமணிதான்விளைந்து
கதலிபழுத்து கனிந்துலடத்துஆறோட
மதுரப்பலாபழுத்து வழிந்தொழுகியேஓட
கழுகுகுலைசாய்ந்து கனிந்துபழமுதிர
தேங்குடனேமா துளையும் சேர்ந்துகலந்துநிற்க
ஓங்குபுகழ்செல்வம் ஒருநாளுங்குன்றுமல்
நடுநீதிநாயம் நாளுந்தவறுமல்
வாசமுடனேவர் மனுநீதிதப்பாமல்
தாரணியெல்லாமகிழ தாரணியோர்போற்றிசெய்ய
காரணியாள்மீனுட்சி கயற்கண்ணிதன்னருளால்

விருத்தம்.

ஐவருமிருந்துபாரி லனேகநாட்சீமையாண்டு
செல்வதுதருமஞாயம் தாசுபோல்நிறையாய்நின்று
கைவருங்கருமமெல்லாங் காரியமறியப்பின்பு
மெய்வரும்புதுமைகண்டு மேதினியாளும்தாளில்

சித்தசரூபனை தீரன்வாளபிமன்னைத்தன்
பத்தனுர்தனதுபோன் பரிச்சித்துமனேவியாளும்
எத்திசைபுகழவேதா னேந்திழைகெற்பமாகி
வெற்றிசெய்மாதம்பத்தும் விளங்கவேசமந்தாள்மாது

கதை

பத்தனுடபோன் பரிச்சித்துவேந்தனுக்கு
நாற்றிசையுங்கொண்டாட நாயகியாள்கெற்பமதாய்
மாதமுந்திங்களுமே வந்தநிட்டந்தானறிந்து
நீதமுடன்சங்கு நேசமதுதப்பாமல்
இதமானபூமடந்தைக் கெல்லாருந்தாமி
முதுகுநீர்வார்க்க மொய்குழலாள்பூமடந்தை
திங்களொருபத்தாகிச் சென்மேசனன்தான்பிறந்தான்
கங்குலிரவுதனில் கதிரோனுதித்தாப்போல்
வயிரமுடன்முத்து வலையாகக்கோத்தாப்போல்
ஆணிக்கனகமுமாய் அழகுசனமேசனுந்தான்
இலமுடன்பால சென்மேசன்வந்திடவே
காலம்துவாபரம்போய்க் கலியுகமும்வாரதிலுல்
வருகுதென்றுலோகம் வழங்குதுகாணிவ்வசனம்

மூதுலகுதீவார்க்க மொய்குழலாள்பூமடந்தை
திங்களொருபத்துதிக்கச் செனமேசனன்தான்பிறந்தான்
கங்குலிரவுதனில் கதிரோனுதித்தாப்போல்
வபிரமுடன்முத்து வகையாகக்கோத்தாப்போல்
ஆணிக்கனகமுமாய் அழகுசனமேசனுந்தான்
சீலமுடன்பால செனமேசன்வந்திடவ
காலந்துவாபரம்போய்க் கலியுகமும்வாரதிலே
வருகுதென்றுலோகம் வழங்குதுகாணிவ்வசனம்
பெருகுபுகழ்தருமருக்குப் பேரன்பிறந்ததிலே
வாளபிமன்றன்பேரன் வந்தானெனவேதான்
காளமுகில்மேனியனுர் கண்ணரவர்தானறிந்து
ராசிகளுமநல்ல நட்சத்திரம்பார்க்க
வாசியெனும்வேதியனா மாயன்வரவழைத்து
பாலன்பிறந்தான் பரிசித்துவேந்தனுக்கு
காலபலமென்ன கருத்தென்னபாருமென்று
மாயனிதுசொல்ல மாமறையோனிதுசொல்வான்
ஜயவரோயிப்போது சொல்லுகிறேன்கேளுமென்றுர்
செனமேசயன்பிறந்தான் சிரும்பலாபலனும்
கோளுரும்பெரிய கொடுமைகலியுகமும்
வருகுதையாவென்று மறையோனெடுத்துரைக்க
பருகுங்கனிவாயன் பச்சைமால்தானிருந்து
ஆனதுவாபரமும் ஆச்சுதென்றுதானினைந்து
கானகமேசெல்லக் கரியமேகவண்ணர்
ஐவருக்குத்தூதாள் அனுப்பினுர்மாயவனுர்

விருத்தம்

காகினியளந்தமாயன் கலியுகம்வருமுன்னுகப்
பேசியேகொள்வோமென்று பிரபஞ்சவிவரமெல்லாம்
ராசியமாகத்தூதாள் நாழிகைதன்னிற்சென்று
மீதிகரைவர்தன்னைச் சீக்கிரங்கொடிவாவென்றுர் (இ)
உத்தரவுசனங்கேட்டு ஒருநொடியதனில்தூதன்
அத்தினபுரியிற்சென்று ஐவரைவணங்கிக்கொண்டு
கத்தரருளிப்பாடல் கருதியேயுரைத்தபோது
சித்தமேமகிழ்ந்துதர்மர் சீக்கிரம்பயணமென்றுர் (ஈ)
நம்பிமார்நால்வர்தன்னைத் தருமருமுவருகவென்று
உம்பர்கோன்தம்பிரானும் நலகினியளந்தமாயன்
நம்பியேயுண்மையாக ரகசியமருளிச்செய்த
இன்பமாய்வருகவென்றுரேதெனத்தெரியவேணும் (உ)

ஆயனூர் தூதன்வந்தா னருவினதெல்லாஞ்சொன்னஸ்
மாயனருண்மைகண்டு வணங்கிநும்வார்த்தைசொல்லி
நேயமாய்வருவோம்நீங்கள் நிமிஷத்தில்வருவோமென்று
தூயதேர்தருமராசன் துரகதமீதிலானூர். (அ)

வேறு.

வீமன்விசயன்நகுலனுமாய் வேதராசன்சகாதேவன்
தாமோதரனூர்தமைக்காணத் தருமருடனேபின்சொல்லார்
ராமாமுகுந்தகேசவா ரகுராமாஸ்ரீஹரியென்று
சோமவாரத்தினிலந்நாள் துவாரபுரிவிட்டகன்றாரே(கூ)

கதை.

வாசமுள்ளபஞ்சவர்கள் மாயன்வரச்சொல்லியொரு
நேசமுள்ளதூதனைப்போய் நிமிஷத்தில்வாவெனவே
சொல்லியனுப்பிவைக்கத் தூதனவனோடிவந்து
நல்லதொருதருமரையும் நமஸ்கரித்துத்தான்வணங்கி
கண்ணீர்திருமால் காயம்புமேனியனூர்
அண்ணல்வரச்சொல்லி அருளினருங்களையும்
அந்தமொழிகேட்டு அடியேனுமோடிவந்தேன்
விந்தமயாமல் விரைவில்வரவேணுமென்று
தூதனுரைத்தமொழி தூயதர்மர்தான்கேட்டு
போதமனமகிழ்ந்து பூரித்திருபுசமும்
தேட்டகுந்தமா தேவிமுன்போய்த்தெண்டனிட்டார்
துய்யபுகழ்மாதாவே தூதுவனுமோடிவந்து
மாயவனுரைவரையும் வரச்சொன்னரென்றுசொல்லி
ஞாயமொருசேதிசொல்ல நாங்கள்வந்தோமாதாவே
மறுத்துநான்செய்ய வகையேதுசொல்லுமென்றார்
தேடிம்புகழ்குந்தியும்மன் சிந்தைமிகமகிழ்ந்து
நாடுபுகழ்மாயன் நமக்குத்துணையாமெனவே
மைந்தர்களேநீங்கள் மனதிலொன்றுமெண்ணுமல்
செந்திருவாழ்மாயன்பக்கல் செல்லுமென்றுதானுரைத்தாள்
கேட்டுமகிழ்ந்தைவர் இருபையுடநமஸ்கரித்து
பூட்டுமதவேளுமன் புரப்பட்டாரைவருமே
பட்டவர்த்தனர்கோடி பார்த்திபர்கள்தான்கோடி
வட்டமதிக்குலத்தில் மகுடவர்த்தனர்தான்கோடி
மந்திரிகளொருகோடி. மற்றுமுள்ளோர்தான்கோடி
மத்தகசங்களணி வரித்தகமுமொருகோடி
மெத்தமகாசேனையுடன் வேந்தரைந்துபேர்களுடனே
அத்திபுரந்தன்னைவிட்டு அகன்றார்காணம்மானே
மரகதத்தேரொன்று மகாமேருக்கொப்பான

துரகதங்கள்தான்பூட்டித் துருவில்வந்தான்தேர்ப்பாகன்
வறுபரிதேர்மீதில் வதிவுர்தருமருமே
நாத்திசைபுத்தம்பியர்கள் நால்வருமேறன்றுக
வறியேதேர்மீதில் இருபுரமுஞ்சூழ்ந்துவர
எண்ணவொண்ணாச்சேனையர்க ளெங்கும்நிறைந்துவர
மன்னர்மகுடர் மனுவேந்தர்சூழ்ந்துவர
வட்டக்குடையும் வயிரியக்குடையும்
பட்டிக்குடையும் பவளமணிக்குடையும்
கூட்டுறவாத்தினமணி கவரிகுஞ்சம்வீசிவர
கூறுகின்றசித்திரத்தால் குடைகள்பலசூழ
வறுகின்றயானைமேல் எங்குமில்லாவாத்தியமும்
வீறுனஓட்டகமேல் விந்தையுள்ளடம்மாவும்
சேரவேஓசையுடன் திசைகளெட்டுந்தானதிர
வெள்ளியால்தம்பட்டம் வெண்கலத்தால்தம்பட்டம்
முடுக்கானமேளம் முரசடனேதானுடுக்கை
எடுக்கவொண்ணாப்பேரிகையும் இராசக்கிடிமுடியும்
வட்டமிடுதாள மத்தளமுமல்லாரி
ஓட்டியமேளம் உலகெங்குந்தானதிர
கஞ்சக்கொம்புகள் சின்னங் காளமுடனேக்காளம்
பஞ்சக்கருவி பலதிசையுந்தான்முழங்க
மண்ணதிரவிண்ணதிர மலைகளெட்டுந்தானதிர
விண்ணதிரமேலே மிகுந்துகம்மல்தான்மூட
குருகுலத்திலேவர் கோபாலர்தன்னருளால்
மன்னவர்கள்மன்னவன்தான் வாழ்பாண்டிமைந்தன்வந்தான்
அன்னபரிபாலன்வந்தான் அத்திபுரிவேந்தன்
செய்யநெடுமால்பதத்தைச் சிந்தைதனில்கொண்டிருக்கும்
வையகத்தனில்தருமர் வந்தார்வந்தாரெனவே
நீடுதிசைகள் நிலைகள்குலைந்திடவே
மூடுபசும்பொற்காளம் முழங்குதுகாணம்மானே
தருமருடன்தம்பியருஞ் சதுரங்கசேனையுடன்
ஒருகோடிகட்டியங்கள் ஒன்றுகப்பாடிவர
பாடும்புலவர் பரிகாரர்முன்னடக்க
கடும்பரியின்மேலிருந்து கைவங்கிகொண்டுவர
வங்காளராவுத்தர் மல்லகசெட்டியுடன்
சிங்காளராவுத்தர் சினகரவுத்தருடன்
ஆரியரவுத்தருடன் ஆகோவென்றார்ப்பரிக்க
பாரியசிங்காளர் பரியேறித்தானடக்க
வீரமணியோசையிட வீரரவுத்தவர்க்கம்

மூர்க்கமதயானையுடன் முன்னணிபாய்த்தானடக்க
அங்குமூரசக்கொடியும் அனுமக்கொடிதன்னுடனே
சிங்கக்கொடியுந் திசைகளெட்டுஞ்சூழ்ந்துவா
விண்ணதிரமண்ணதிர விண்ணிலுள்ளோர்தானடுங்க
எண்ணரியதீதிசை எட்டுந்திடுக்கிடவே
கூடிமகாசேனையுடன் கொற்றவர்கள்தன்னுடனே
நாடியேநீள்தருமர் நடந்தார்காணம்மானே
அத்திபுரத்தினுள்ளே அங்கேவந்தவர்தாமும்
மெத்தவேதாஸ்பட்டணத்தின் விடுதிகளித்போயிருந்தார்
தெரிந்தபுகழ்தருமர் சேனைபவந்துடனே
பரித்துவாரபுரி பதிவந்தாரோவருமே
கன்னூத்துவாரபுரி பதியைவலமாய்வந்து
மன்னர்தருமர் மகிழ்ந்துவந்தாரம்மானே
மாதாக்கன்தான்சிலபேர் மன்னர்தனக்கெதிராய்
ஆதரவாய்கர்ப்பூரம் ஆலத்திகொண்டுசென்று
மூரசக்கொடியோனே முன்பாய்ப்பணிந்தவர்கள்
வீரக்கொடுமையிலே வீணுய்மயலானூர்
கையில்வனைதான்விழவுங் காலில்சிலம்புவிழ
மெய்யிலணிகற்பணிகள் வெவ்வேறுய்த்தான்விழவும்
கூடையவிழ்ந்துவிழக் கூந்தல்குதிக்காலில்விழ
நாருமலர்கள் நடுத்தெருவில்தான்விழவும்
அன்னவனைநாங்க ளாடுமெயிலாமெனவே
பொன்னனையார்பின்படித்துப் போறார்களெல்லோரும்
மாதர்களெல்லா மன்னவனைத்தான்தொடர்ந்து
ஆதரவாய்த்தங்களுட ஆசைபலகூறலுற்றார்
தேசமெல்லாஞ்செங்கோல் செலுத்துந்திகிரிமன்னு
ஆசைகொண்டாற்குன்புயமு மருளுவதுமாகாதோ
தேரும்பரியுடைய தேர்வேந்தேஎங்கள் துயர்
பரிவுடனேநீதிரும்பிப் பார்த்தருளலாகாதோ
அன்புடையீர்நல்ல அறிவுடையீர்எங்கள் துயர்
பின்திரும்பிப்பார்த்தால் பிழைகள்வருமோதான்
பொங்குறெறியுடைய புண்ணியவானென்பார்கள்
இங்கெமையேநீர்திரும்பிப் பார்த்தாலிளப்பமுண்டோ
அடங்காதமயலாய் அறிவழிந்தோமெங்களையும்
இடங்கண்ணுல்நீதிரும்பிப் பாருமென்றேஎந்திழையார்
கொங்கையசையநல்லக் கூந்தல்குலைத்தசைய
அங்கணனுந்தான்சிவப்பா யவர்தொடர்ந்தாரம்மானே
அறிவழிந்துபின்தொடர்ந்த அரிவையர்கள்தன்துயரம்

பரிவுடனேதாணைக்கிப் பார்த்திபனும்தீர்த்தருமன்
சேர்ந்தேதமயல்தீரச் சேயிழையார்தங்களுக்கு
பூந்துகில்கள்தாமளித்துப் போனர்காணம்மானே
கொற்றவனுந்தானெருங்கிக் கோபுரவாசல்தனிலே
மற்றுமுள்ளமாசேனை மன்னனையுந்தானிறுத்தி
கூறியவேலைவருந்தான் கோயில்தனிற்புகுர்தார்
சீரறியமால்பதத்தில் தென்டனிட்டாரம்மானே
கண்ணன்தருமனையும் காதலுடனேயழைத்து
வன்னமணிமார்பில் மகிழ்ந்தழைத்தாரம்மானே
தெரிந்துமற்றதால்வனையுந் திருமால்மனமகிழ்ந்து
பரிந்தேயருட்கண்ணால் பார்த்தனர்காணம்மானே
அந்தரர்கோன்மைத்துடன் ஐவனைப்வுக்கொண்டுசென்று
மந்திரச்சாலையிலே மாயோனும்போயிருந்தார்
நெய்யுண்டமாலே நெடியோனேஎங்கோன்தான்
வைகுண்டமூர்த்தி வரவழைத்தகாரியமேன்
என்றுதர்மர்கேட்க எம்பெருமானே துசொல்வார்
மன்னுபுவியாளும் மன்னவனேசொல்லுகேன்
மன்னன்தருமனைத்தான் மாயன்முகம்நோக்கி
உற்றவிசனம் உரைக்கலுற்றாரம்மானே
மண்டலத்தையாண்டு மனுநீதிதப்பாமல்
விண்டலத்தோர்கொண்டாட மேதினியில்தானிருந்து
நீதிதவராமல் நெறிமுறைமைதப்பாமல்
சாதிவரம்பு தவறிலைகள்சோராமல்
வாழ்ந்திரிதுவரையில் மன்னவரேயிப்போது
நரன்தானெருசேதி நடந்துகிறேன்கேளுமென்றார்
தல்லதென்றுபஞ்சவர்கள் நாரணரேசொல்லுமென்றார்
வல்லதொருமாபன் வாய்திறந்தங்கேதுசொல்வார்
சொல்லுந்துவாபரமும் தொகையுஞ்சரியாச்சு
வெல்லுங்கலியுகமும் விபரிதமாய்த்தான்வரவே
பாதமுடன்பூமி பாரமதுதான்தீர்த்தேதம்
ஆசையுடனிங்கிருக்க அடவல்லவென்றுசொல்லி
மற்றுமினிநாமுமிந்த வைகுந்தவாழ்பதிக்கு
போற்றுமிந்தமாநகரை விட்டுமிகப்போறேரும்
ஆகையினல்நீருமிந்த அவனியிடர்தீர்ப்பதற்கு
வினீரன்னுவில் என்னுடனேதிங்களுந்தான்
மாதுபயில்வர்தே வைகுந்தவாழ்பதிக்கு
போவிரோவென்று புகழினர்காணம்மானே
வில்லாமன்னவனே இன்னமொன்றுநீகேளாய்

காசினிதானுந்தனுக்குன் கைவசமுந்தாருகி
மற்றுமினியுங்களுக்கு வலுமையுடன்விரியங்கள்
உற்றுமிகமுன்னுட்போல் உதவாதுமன்னவனே
சத்தியமுநில்லாது தர்மநெறிநில்லாது
அத்திருவும்நில்லாள் அசத்தியமும்வந்துவிடும்
தாய்தனையும்பேணார் தந்தைதனைநினையார்
ஆயன்குருவின் அருளுமவர்நினையார்
தம்பிதமயனென்றும் பாராரிகள்தர்ம்மமில்லை
அம்புவிதன்னிலேதான் அனியாயமேலாகும்
மாதவங்கள்தானழியும் வரமுமழிந்துவிடும்
வேதங்கள்தான்பலவும பேதங்களாகிவிடும்
சாதிநிலைகுலைந்து சதிதருக்கள்மேலாவார்
தீதியழிந்துவிடும் நெஞ்சகமேவஞ்சகமாம்
மாசில்லாப்பூவுலகில் மாரிமறந்துவிடும்
காசினியில்நாரியர்கள் கற்புமழிந்துவிடும்
விதித்தகலிகாலம் விசேஷிமதுகண்டாயே
கதித்தகலிகாலமென்று கட்டுரைத்தாரம்மானே
ஆதலாலுங்களுக்கு அரசேதாலியாகு
மீபாதுவிர்நம்முடனே போந்தாமலிப்புவியை
ஆளவல்லோதூற்றுவரை அன்றுவதைத்திரே
மீளவுமப்படியே மேதினியைக்கார்ப்பிரோ
உங்களுக்குத்தான்றியதை உண்மையாய்ச்சொல்லுமென்றார்
செங்கண்திருநெடுமால் செப்பினர்காணம்மானே
சாற்றுமொழிகேட்டு தருமர்மனமகிழ்ந்து
போற்றியேமாயனையும் புகலுற்றாம்மானே
சோதியேவேதச் சுருதிக்கதிபதியே
ஆதிவராக அரிகேசவமுகுந்தா
அச்சுதாபஞ்சவர்கள் ஐவருக்கும்நாயகமே
சச்சிதானந்தமெனுஞ் சாருபவாசமுள்ள
கர்ப்பூரவாசகனே காயாம்புமேனியனே
பொற்பூவும்வாசமுள்ள பூலோகமீதில்வந்து
தங்களுயிர்போலத் தற்காத்தீரின்னுமும்
எங்களைத்தான்காக்க இவ்வழிவுதானெடுத்து
திருஞ்சிறப்புஞ் செலுத்திமிகுசெல்வமெல்லாம்
பெருஞ்செலுத்திப் பிரபலமாய்த்தானிருக்க
யுத்திரிதுவரையில் வாழ்ந்தோஞ்சிலகாலம்
த்துனர்போலெங்களுக்கு வராகமாய்த்தானிருந்து
பூதகெஞ்சன் அனியாயநிஷ்டேன்

மாபாவியான வணங்காமுடிவேந்தன்
வாரிதனிற்கமுவை வைத்துதுவும்போதாமல்
பார்மீதில்நஞ்சைப் பரிந்தேயளித்ததுவும்
மாதத்குமாளிகையில் வன்னிவளர்த்ததுவும்
மூத்துமந்தவாரிதனில் மூழ்கிவரத்தானிணைந்து
பொய்ச்சூதையெங்கள் புவியையவர்வாங்கியதும்
துற்சாதனன்சபையில் துகிலையுரித்ததுவும்
பிறந்துநச்சுப்பொய்கை புதுசாய்ச்சமைத்ததுவும்
துறந்துதபிக்கவென்று தூறுவாசர்வந்ததுவும்
மற்றுமவர்செய்த வன்கொடுமையாலேயும்
சற்றுத்தளராமல் தற்காத்துத்தாபரித்தீர்
தந்தையரும்நீயேகாண் சற்குருவும்நீயேகாண்
குந்தியரும்நீயேகாண் கொண்டல்வண்ணனெங்களுக்கு
தாயுதிக்குந்தான்பார்த்து நடப்பீரிருப்பீர்காண்
மேலுமிருப்பீர் மேதினியிற்றனிருப்பீர்
ஆருமறியாமல் ஆலிலைமேற்பள்ளிகொள்வீர்
பாருலகையுண்டு படைப்பீருலகளப்பீர்
கோலமெல்லாம்நீகொடுத்த கோலமேயல்லாது
ஞாலமதிலுன்னையல்லால் நடப்பதுவும்வேறுமுண்டோ
ஏதோதிருக்கூத்து எத்தனையோவிஸ்தாரம்
சூதோ அவருடைய சூஸ்திரத்தையாரறிவார்
கண்ணுக்குள்பாவைபோல கலந்திருந்தகாரணரே
விண்ணுக்குள்தேகசலம் மேதினிக்குளாக்கிவைத்த
கர்த்தனேயும்முடைய காவல்லாலிங்கிருந்தோம்
நித்தனேயும்மைவிட்டு நிமிஷமிருப்போமா
என்னமொழிபேசினீ ரெம்பெருமாளென்றுதர்மர்
பன்னகமேற்றுயின்ற பச்சைமுகில்மேனியரே
அட்டதிக்குந்தானறிய ஐவர்தனையெப்போதும்
விட்டுப்பிரியாத மேகவண்ணர்தன்னைவிட்டு
மண்ணுசையாலே மறத்தார்களென்றுசொல்லி
விண்ணெரும்வானவரும் மேதினியுந்தானகைக்க
விருப்பமுடனெங்கள் மேதினியையுண்டெனவே
இருப்பதுவுமில்லையினி எவ்விதமதானாலும்
திருவுந்திபூத்தோனே திவ்யமலர்ப்பதத்தைக்
கண்டுவணங்கிஐவர் கைகட்டிவாய்புதைத்து
தொண்டுபண்ணிநாங்கள் தொழுதுவைகுந்தமதில்
கார்த்திருந்துவல்லசெய்யக் கற்பிக்கவேணுமையா
வீற்றிருப்போமும்மிடத்தில் மேதினியேவேண்டாங்காண்

அன்றசுவத்தாமாவை அச்சமரில்வைத்தாயே
வென்றுசதிர்மறைத்து விஜயனேபுங்கார்த்தாயே
பாருலகிற்கஞ்சன்றன் பழிகாக்கநீர்தானும்
வீரன்சயித்தனையும் வீமனல்கொன்றுயே
சிந்துபதிசாபஞ் சிதையயழித்தாயே
எந்தவகையானுலும் ஈரொன்பதுநாளில்
பார்த்திபர்கள் நூற்றுவரும் பதினெண்குரோணிபடை
நாற்றிசையோர்மன்னரையும் நற்படையோர்தங்களையும்
தீயேவதைத்தயே நின்னையல்லால்வேறுமுண்டோ
நாராயணர்பாதம்நாள்தோருங்கார்த்திருக்க
மாண்டுவைகுந்தம் வாழ்பதிக்குஐவரையும்
கொண்டுசெல்லுமென்று கூறினீர்தருமருமே
பின்னுந்திருமால் பேசலுற்றரம்மானே
நீதிகண்ணில்குற்றம் நிமைக்குந்தெரியாது
நாடுதனில்செய்தகுற்றம் நன்குகயெங்களுக்கு
தெரியாதபடியெங்கள் செய்தபிழைதீர்ந்திடவும்
பிரியாதுலகில் பேராசையற்றிடவும்
கண்ணும்பரகதியை நாங்களடைவதற்கு
அண்ணலேநீகிருபை அளித்திடென்றரம்மானே
மாயவனுர்தாமகிழ்ந்து வைகுந்தவாழ்பதிக்கு
நேயமுடனாமும் நினைந்துசெல்லுமப்போது
மன்னவனேதூது வரவிடுவேனுந்தனுக்கு
பின்னவனும்பூர்த்தனுடன் போனபரிசித்துவையும்
போற்றுமியலத்தி புரத்துக்கதிபதியாய்
சாற்றும்புவிக்குத் தலைவனெனவுனைக்க
வைத்துமணிரத்தினம் மகுடமுடிசூட்டி
அத்திபுரந்தன்னில் அங்கவனைநீரிருத்தி
வீறுபுகழ்குந்தியையும் வேந்தனேநீயழைத்து
கூறும்பரிசித்துவின்றன் கொலுவிலிருமென்றுசொல்லி
கலிதான்வருவதுமுன் காவலோநீர்தாமும்
மெலியாமலிவருமே மெல்லிநல்லாள்தம்முடனே
பக்தமணிவைகுந்தப் பரகதியைப்பார்க்கவென்றுல்
மற்றுமகாவித்தமே வாருமென்றுனைவனையும்
மன்னவர்கள்தான்பணிந்து மாயோனைத்தானேக்கி
உன்னருளால்வேறே ஒருதுணைகளுண்டோதான்
நீதாலேநாங்கள் செய்தபிழையுள்ளதெல்லாம்
எந்தாயிலும்பொறுத்து இரட்சிக்கவேண்டுமையா
ஐயாவேசுவாமி ஆகிகேசவமுகுந்தா

மெய்யாய்வைகுந்தபதம் வேண்டியேவாறேங்காண்
னன்றுபணிந்து இயல்பாகஜவர்களும்

விருத்தம்,

னங்குமாய்நின்றமூர்த்தி ஈரேழுலோகமெங்கும்
அங்குமாயிருக்குமாகி லாருயிர்க்கெல்லாந்தானாய்
பொங்குபூரணமாய்நின்ற பொன்னலங்காராபோற்றி
தங்குவதில்லைகாங்கள் தாணியிலும்மைவிட்டு. (ம)
ஆவதோர்காலமெல்லா மச்சுதன்செயலினாலே
போவதோர்காலம்வந்தால் புத்தியுமிலக்கலாமோ
சாவதோர்காலம்வந்தால் சற்றிங்கேதிரிக்கப்போமோ
காவதுகொண்டெஞ்சொல்லோம் காரணாபோற்றிபோற்றி. (ஙக)

கதை;

னன்றுதர்மர்மாயவர்தன் னிருதாளைப்பூண்டுகொண்டு
சென்றுமகாசேனையுடன் திரும்பினாரம்மானை
மேற்றுமகாசேனையுடன் வேந்தருடன்பேர்ந்து
சாற்றுமபுகழதருமர் தானதிரும்பிப்போனதின்
வற்றுவாரபதிதனிலேமாயவனும்
வீற்றிருந்துசெங்கோல் விசாரிக்குமந்நாளில்
சாத்திரங்கள்சொல்லும் தவமுனிவரந்தணரும்
காலங்கலியுகமும் கற்பனையுமவந்ததினால்
கோலங்குருகிக்குணமேதகமாகி
பொய்யுங்குலையும் புனைசுருட்டுமேகளவும்
செய்யும்பரிகாசஞ் சின்னமுதாசினமும்
குண்டுணியுங்கோளுங் குடிகேடுவஞ்சனையும்
தெண்டம்பரும்பிடியுந் தெண்டனையுங்கண்டிதமும்
மானபமழிந்து வரம்புதப்பிப்போவதுவும்
தானதவங்குலைந்து சத்தியமும்பொய்யாகி
மேல்குலமேகீழ்குலமாய் கீழ்குலமேல்குலமாய்
கால்மேலுந்தலைகீழாய்க் கலியனபிறக்குமென்ரு
நால்வேதஞ்சொல்ல காரணருந்தான்கேட்டு
பால்பொருந்துவாயாற் படைத்தலைவர்மந்திரிமார்
சாத்தனிப்பாழ்வார் சகலனையுந்தானழைத்து
வத்தவிசாரமென்று இனியேதுசொல்லுமென்ரூர்
தேவர்செயலாலே தீவகரியோகாமடியார்
வல்லசெய்யுந்தொண்டா ஏதென்றெடுத்துரைப்போம்
சொற்புத்திகேட்குந்தொண்டருக்குநீர்தாமும்
சற்பித்தருளியசொல் கர்த்தனேசித்தமையா

கேட்குமடியார்க்குக் கிருபையின்னதென்றுரைப்பீர்
தீர்க்கமுடனுழியங்கள் செப்புகிறேமென்றுரைத்தார்
ஆதாவாய்மாலும் அவர்கள்தனையாதரித்து
சீதமிக்கநாமமும் கீணில்லத்திலேயிருக்க
சோகியாள்சொன்ன சொற்படியேகாமும்
வாதனைக்குள்ளாகாமல் வனத்தில்தவசிருக்க
கன்முகத்தோனுதப்பா நம்முடையயோசனைக்கு
குன்றுமல்கீங்கள் குவலயத்திலேயிருந்து
எப்போதும்போலே யிருப்பீர்சுகமாக
அப்போதிருந்தவர்கள் அகமுமிகவருகி
இருக்குந்தருணமதில் இன்னமொருகற்பனைதான்
பொறுக்கும்பெருமாளே பிள்ளைகள்தான்செய்தபிழை
பச்சைமாலின்ற பதினுயிரம்புதல்வர்
இச்சையுடன்கூடி இசைந்துவினையாடுகையில்
வீதிதனில்நின்று விளையாடுங்காலமதில்
மாதுபயில்துர்வாச மாமுனிவன்தான்வரவே
சங்காகிவேடமுமாய்த் தான்வரவேகண்டார்கள்
மின்னற்போல்வேட மிகுந்தொருகெற்பமதாய்
ஒருகுமாரர்தன்னி லொருவனுக்குமபெண்ணுடையாய்
நீதில்லாதவமூர்த்தி செய்தஉதாரமதில்
பாத்திரையைவைத்துகல்ல பட்டாடையுடுத்தி
எத்தமுக்காடிட்டு னதிர்சென்றாரம்மாளே
கோலஞ்சிறந்து குழாங்களுடன்தான்கூடி
காலஞ்சிறந்துமவர் காரணங்களேமுடிய
குருமுனிவர்காலில் குமாரர்களும்போய்பணிந்தார்
பெருமையுடனிவன்தான் பெணபெருமோ ஆண்பெருமோ
திருமுனியேசெப்புமென்று தெண்டனிட்டாரம்மாளே
குருமுனியுந்தானகைத்து குமாரர்தனைநோக்கி
வீறுகின்றனங்கள்வம்சம் மெய்யாயழிந்திடவே
இந்தப்பெண்தன்வயிற்றில் இருப்புலக்கைதானுமொன்று
மூந்திப்பெறுவாளெனவே மொழிந்தனர்காணமமாளே
அச்சாபமிட்டு அருன்முனிவன்போனபின்பு
இச்சாபம்போகாமல் இருப்புலக்கைதானுமொன்று
மாயன்குமாரர் வயிறதில்வீழ்ந்திடவே
ஐவர்குமாரர்சொல்லாங் கண்டுதுயரமதாய்
இருப்புலகைதன்னை எடுத்தகங்கேபோயினர்கான்
கொண்டல்வண்ணர்முன புவைத்துக் கும்பிட்டாரம்மாளே
கண்டெருமால் கருத்தில்துயரமதாய்

மீண்டுகொலலையழைத்து மேன்மையானவாளாத்தால்
சல்லிப்பொடியாகத் தவிடுபொடிசெய்யுமென்றார்
அந்தப்படியாக அரத்தால்பொடியாக்கி
சிந்துபொடியுஞ் சிறுமணல்போலானபின்பு
அரத்திட்டாவி அதிகமிகப்பொடியாய்
உதிர்த்துச்சிறுகணுவாய் உச்சிதமாயமைத்தமென்றார்
கணுவையெடுத்துக் கடலிலேபோடுமென்றார்
அணுவாயுதிர்ந்ததெல்லாம் ஆலியோரந்தாவுமென்றார்
ஆமென்றிறைஞ்சுவிட்டார் ஆயனர்சொற்படியே
தாமுயன்றகர்மம் தனக்கேபலித்துதென்று
விளைத்தபொடியெல்லாம் மெல்லியுங்கோதையதாய்
உருத்திரமூலைத்துமகா உன்னதமாய்த்தான்மூலைத்து
நின்றதுகாணங்கே நெடியோனருளாலே
உன்றுமிச்சமான உருண்டக்கணுவதனை
மச்சம்விழுங்கி வலையில்வந்துசிக்கியதே
அச்சமில்லாவேடன் அந்தமச்சந்தான்வாங்கி
கீறிக்கிழிக்கில் கிடந்தெடுத்தா னிக்கணுவை
மீறிச்சுந்தனிலே விருப்பமுடன்தான்சேர்த்து
வைத்திருந்தான்வேடன் வகையாகஅம்புதனை
புத்திரரும்பார்த்துப் பூரித்துக்கொக்கரித்து
ஆற்றிலேசென்று அணிவகுத்தாரம்மானை
ஊற்றிலேதான்மூலைத்த உயர்கோதைதான்பிடுங்கி
அடித்துவினையாட அணைவோருஞ்சம்மதித்து
தெருங்கியடித்து ஜிமிஷத்திலமாண்டுவிட்டார்
வருங்காரியமரியாமர் மதலைசுருமாண்டுவிட்டார்
வினையாடவந்திடத்தில் விதிவசமுந்தான்சூழ்ந்து
இனையோடிறந்து கிடக்கிறானென்றுசொல்லி
கண்டபேரோடிக் கண்ணீரிடந்தாமுரைத்தார்
வாதாதுவாசன் மாமுனிவன்சாபத்தால்
ஆறுகவேணுமென்று அரியமுனிதானுரைத்தார்
பாராகவேநமக்குப் பலித்ததே அச்சாபம்
ஆண்டபிராணும் அலுவலொழிந்ததென்று
செய்யுஞ்சடங்கு சீக்கிரமாய்த்தான்முடித்து
வைகுந்தஞ்சேர மனமுற்றாரம்மானை

விருத்தம்.

தம்பிமார்முகுடமன்னர் சகலரும்வாருமென்று
எம்பிரானருளிச்செய்ய ஏவல்கேட்டேதோவென்று
நம்பிகாணவோவந்தோம் நாதனேசரணமென்று
தம்பிமாரியப்போற்றிச் சாத்தகியாழ்வார்வந்தார் (உஉ)

நின்றதோர்மன்னர்தம்பி நிருபர்தன்முகத்தைநோக்கி
நன்றலர்ந்தகோபர் நானிலம்விட்டுக்காணப்
பொன்றிடவேணுமென்று புவிதனையாண்டுநீங்கள்
தென்றலங்காம்போலச் செகந்தனில்வாழுமென்றார் (வஉ)
கரியமாலருளிச்செய்த காரணமேதாவென்று
தெரியவேவிவரங்கேட்கத் தேசிகரிரங்குமுரை
அரியதோர்கலியண்வாரா னெனதால்வனதகிற்போறும்
பெரியதோர்புவனமெந்தன் பேரனைச்செலுத்திவாழும் (வசு)
இப்படியிறையோன்சொல்ல ஏங்கியேமுகமும்வாடி
அப்படிச்சொன்னீரானு லடியரும்வாரோமென்று
செப்பிடத்திருமால்தானுந் தெரியவேவுண்மையாக
வைப்பினிலிருங்களென்று வனம்புகுகடந்தானையா. (வஎ)

கதை,

வனத்தில்தவசிருக்க மாயவனர்தான்மகிழ்ந்து
சனத்துக்கிதவான தன்மகளும்புத்திகளும்
சொல்லியுபசரித்துத் துயரமெல்லாந்தான்தீர்த்து
மெல்லியதோர்கானகமே விரும்பிமனதிலெண்ணி
சாத்தகியாழ்வார்க்குத் தனிமுடியுந்தான்தரித்து
காற்றிசையும்போற்ற நம்மைப்போல்தானினென்று
முடிமகுடந்தான்தரித்து முறைமையாய்நீயிருந்து
நெடியமால்வாழ்த்தி நீறணிந்தார்தானவர்க்கு
மன்னரமைச்சர்களே மகுடமுடிவேந்தர்களே
வின்னமில்லாதபடி மேதினியிலெல்லோர்க்கும்
சொன்னபடிகேட்டு தொழுதுவணங்கிற்கும்
அன்னசுற்றமெல்லாம் அச்சமின்றித்தானிருங்கள்
காலங்கலியுகமாய் காரணமூன்றேன்றுகையால்
ஞாலங்கள்தானறியும் நம்முடையரூபமெல்லாம்
விபரியாதகட்புப் பொறுமையதுபாரில்நின்று
சிறுமைவருமெங்களுக்குத் தேவரீர்போறதினால்
என்றுமயங்கி எழுந்துமன்னவர்தாழும்
நின்றுதலைகவிழ்ந்து நெடியோனைப்பின்றொடர்ந்தார்
தொடர்ந்தழுதகம்பியையும் தூமைக்கள்தங்கணையும்
அடர்ந்துவராதபடி அமர்த்தியேஅச்சுதனர்
வானம்புவியளந்த மால்பாதந்தாங்கி
கானகமேநோக்கிக் கடுகநடந்தனராம்
நாடுவிட்டுத்தேசம் நன்னகரிதானுமிட்டு
கூடுவிட்டுத்தேனுளவி கொட்டாதபாவனைபோல்

காடுகளாகண்டார் கண்ணனுர்கண்ணுலே
தேடுந்தவமீதில் சிவயோகாட்டமதாய்
பேரழிவுகொண்டு புறப்பட்டாரம்மானை
ஊரருகாய்நின்ற உயர்ந்தமரங்களெல்லாம்
பூத்துச்சொரியும் புனமுமிகத்தழையும்
காத்துவிசரியதாக் காளாஞ்சிபூமியதாய்
மயில்கள்தொடர்ந்தாட வானரங்கள்கூத்தாட
குயில்களிசைந்தாடக் கொஞ்சுங்கிளிபேசிவர
புலிகளடிபணியப் பூதங்களாடிவர
கிலிகள்மிரண்டோடக் கீர்த்தனங்கள்தான்முழங்க
அரிகளடிபணிய அரியோனுந்தானடந்தார்
கரிகளடிபணியக் கரியோனுந்தானடக்க
கஸ்தூரிவாசனென்று கஸ்தூரிவந்துதொழ
வஸ்துவுக்குள்வேண்டினதோர் வஸ்தெல்லாம்வந்துதொழ
கற்பூரவாசனென்றுங் கற்பூரஞ்சூழ்ந்துவர
நற்பூமலர்களெல்லாம் நாறறிசையும்பூத்துநிற்க
அரவுயர்க்தோன்பன்பாதம் அரவுபணிந்தாட
இரவுபகலாகி எம்பெருமாள்வந்தவிடம்
மேகநிறமேனியற்கு மேகம்பணிமாற
ஆகங்குளிர்ந்து அனேகநெடுந்தூரம்
வேந்துநெடுமால் வனமெல்லாமாராய்ந்து
கோந்துலவுசெண்பகஞ்சேர் குளிர்ந்தவனச்சாலைகளும்
சந்தனமுங்கற்பகமுந் தருவும்பெருவனமும்
கந்தமலர்காவும் கடம்பவனச்சிறப்பும்
ஆதவனூடாடாத ஆரணியமானதிலே
மாதவனுஞ்சம்மதியாய்மனதுமிகமகிழ்ந்து
நாலுதிக்கும்பார்க்க நடுவேயொருவிருட்சம
ஆலுதித்துநின்ற அடவிதனைப்பார்த்து
இத்தவிருட்சம் நாமெங்கேயுங்கண்டதில்லை
அத்தவிருட்சம் அதுவேநமக்குநிலை
கிற்ப்பாந்தவசு நிறைவேறவேணுமென்று
கற்பூரவாசங் கலையாசனம்விரித்து
பொற்பூவும்வாசமும்போல் பொருந்தினமொன்றுகி
அஷ்டாக்ஷரத்தில் அமர்ந்திருந்தார்மாயவனர்
காட்டாற்றிலன்று நடுக்கடலிறபோட்டதொரு
இருப்புக்கணுப்பதித்தாளைய அம்புதானெடுத்து
செருப்புச்செடிதாங்கி சீரோவுந்தானெடுத்து
சூலையெடுத்துவேடன கிற்றருவாள்கைபிடித்து

வேமான்கனைத்துக் கனவேடன்காசுற்றி
மான்மரைகள்தேடி வனத்தூடேசெல்லுற்றான்
தேன்மருவுந்தாரான் திருவேங்கடப்பெருமாள
ஆரணியந்தன்னில் ஆலமரத்தடியில்
தாரணியைவிட்டு தவசிருந்தகோலமதை
வேடனிடகண்ணுக்கு விரைந்துவந்தமானதுபோல்
அண்டர்பிரான்ரூபம் அவன்தனக்குமான்போலே
கண்டான்முடுகிக் கடுகிச்சடந்தொடுத்தான்
விட்டான்சரத்தை வேடனவன்மானெனவே
மார்புளவாங்கி வல்வேடனெய்துவிட்டான்
சீர்மருவுமாயனுட சீர்பாதந்தன்னில்வந்து
பட்டருவி அம்புப் பரிந்துமதுபுறமும்
கட்டருவியோடத் தண்டாமரைப்பதத்தில்
மண்ணெயுண்டமாயன் மயக்கமவந்துபூமியிலே
வெண்ணெயுண்டமேனி விசனம்பொறுக்காமல்
மூச்சற்றுமேனி முகமும்வெளுப்பேறி
பேச்சயர்ந்துகாலயர்ந்து பிறக்கிணையுந்தோற்றுமல்
தானேயசந்து தனியேவிடுகையிலே
மானைய்தோமென்று மகிழ்ந்துசிலவேடன்
பதையாதமர்ந்துதென்று பாய்குடனேஓடிவந்து
வதைபட்டமர்ந்துதென்று வல்வேடன்பார்ப்பளவில்
குதையம்புபட்டுருகிக் கோபாலர்தான்கடந்தார்
இதைவர்துபார்த்து ஏமாந்துவல்வேடன்
கதையோகதைப்பயனே காலத்தின்வல்வினையோ
விதியோவிதிப்பயனே பிரமாவிள்கற்பினையோ
மதியோமதிமயக்கோ மகாதேவர்கற்பனையோ
ஏதோவிதிப்பயனே என்பெருமாள்தனதில்
தீதுவரக்காரியமேன் செய்ததவக்குறையோ
மானென்றெணமயக்கி வந்தவிதிவசமோ
தானென்றுலகளந்த தம்பிரான்மாவென்னவே
பொய்மான்போல்வந்த புதுமையறியாமல்
மெய்மானெனவெறண்ணி விரும்பிகானெய்துவிட்டேன்
என்னெஞ்சேயென்செயலே எதென்றறியேனெண்
முனசெய்ததீவினையே முகுந்தர்மேலம்புபட
வஞ்சனைகளில்லை மனதறியவந்ததல்ல
கஞ்சனைமுன்வென்ற கார்வண்ணனென்றறியேன்
பாவியுமானேனே பச்சைமால்காரணற்கு
கிவினைகள்செய்தேனே செண்மமென்னசென்மமினி

சான்றுதிலேவேடன் வங்கிவிழுந்தலறி
குன்றுதவரிக் குலலயத்தில்வீழ்ந்தாற்போல்
அலறி அபயமிட்டு ஐயோசிவனேயென்று
தலையிலேதானறைந்து தானழுதான்வல்வேடன்
வில்வேடன்றனழுக மெய்மகிழ்ந்துகோபாலர்
வல்லவேடீயும் மலையாதேயென்றுசொல்லி
அழுதவனைத்தேற்றி அறவணைத்துவாவெனவே
தொழுதவணும்வந்து தூரவந்துதண்டனிட்டு
சந்தப்பிரானே எளியாற்கெளியோனே
உந்தன்மலர்ப்பாதமதில் ஊடுருவி அம்புதைக்க
செய்தேனேபாவி எழுகரில்வீழவேனே
மையழகுமேனியிலே வடுவாவங்காயமேன்
வம்புபடாமேனியிலே வடுவாவேனய்ததொரு
அம்புதாட்டகையை அறுத்துமுன்னேவைப்பேனுன்
அன்றுலகையெல்லாம் அளந்தபாதமல்லோதான்
சென்றுநிசைசான்முகனார் தேடும்பதமலவோ
அகலிக்குமோட்சம் அளித்தபாதமல்லவோதான்
புகலரியகங்கை புரிந்தபாதமல்லவோதான்
பேசுமுருவசியாள பிறந்தபாதமல்லவோதான்
பூசாருந்தேவர்களும் போற்றுபாதமாமலவோ
வேடனிவனசொல்ல வெகுண்டுமுகமாயவனும்
தோஷமில்லையுன்பேரில் சும்மாமலயாதே
முன்னளில்கீயும் மிகுந்தொருவாலியென
அன்னளில்கீயிருந்தாய் அப்போதுயெய்துகொன்றேன்
முன்னட்பழிவாங்க எய்துகொண்டாய்வில்வேடா
இந்தபுவியில் மிப்போதுவந்தோம்நாம்
நமக்குமுடிவிதுகாண் நல்வேடாசொல்லுகிறேன்
சமக்குமகியுகத்தால் துன்பம்வருமென்றுசொல்லி
வைகுந்தம்சேரவென்று வந்தோம்வனத்திலேதான்
கைகொண்டெழிந்த கணைக்காயில்லைதத்துகாண்
முடியுஞ்சரியாக முடிந்தவிதிப்பயனல்
மடியஉயிரிறந்து வைகுந்தம்போய்சேர
போறதறியாமல் புலம்புவரோகீவேடா
வாவிதிவந்தால் மாட்டேனெனறுல்லங்கோ
வந்தவிதிவந்துதென்றுல் லந்தவிதமானலும்
இந்தமயக்கமிதை யிப்போதேவிட்டுவிடு
உனசெய்திபார்க்கில் உன்மீதில்குற்றமில்லை
எனசேதிசொல்லுகிறேன் இதவாயுதவிசெய்வாய்

நல்லதென்றுவேடன் காரணைத்தான்பணிந்து
சொல்லுமென்றுவாய்புதைத்துச் சோம்பிமுகம்வாடி
வாட்டமுடனின்று வல்வேடன்தான்கேட்க
நாட்டமுடன்மாயன்நம்பெருமாளேதுசொல்வார்
வாராய்நீவேடா மன்னுபுகழ்பஞ்சவர்கள்
தாராரும்அத்திபுரம் தர்மரும்தம்பியரும்
சோகவாழ்ந்து சிறந்தகர்தனிலே
நோகநீபோய் நிமிஷத்திலுண்மையதாய்
தர்மர்நகுலன் சகாதேவன்கேளாமல்
மவுனவெளிதனிலே வாராமல்நீதானும்
வீமன்விசையனிடம் விளம்பிவாளன்னென்செய்தி
தர்மரவர்சொன்ன துவாய் சாற்றுமென்றுதானுரைத்தார்
வேறொன்றுஞ்சொல்லாமல் விபத்துவந்துதென்றுசொல்லி
கூறவென்றுசொல்லிவிட்டார் கூர்வேடன்தன்னிடத்தில்
அவ்வசனங்கேட்டு அசந்துசிலேவேடன்
இவ்வசனங்கேட்டு பிராகவனேத்தெண்டனிட்டு
வழிகூடித்தானடந்தான மனநிடைந்துதான்வேடன்
பழிபாவம்வந்துதென்று பயந்துதிசைநோக்கி
காடுகடந்து கருமலையுந்தான்நடந்து
நாடுநகரிசென்று நன்னகரிஊடேபோய்
காலுதெருவும்நடித்தெருவுந்தான்கடந்து
கொலுவுமரண்மனையுங் கொற்றவர்கள்தானிருக்கும்
கோட்டைதனில்சென்று குருகுலத்தோர்தங்களுடன்
வீட்டையுங்கண்டு வீமன்விசையனிடம்
அச்சுதனுசொன்னதொரு ஆந்தரியமுள்ளதெல்லாம்
உச்சிதமாய்வேடன உரைத்தான்காண்மன்னவற்கு
அந்தமொழிதருமர் அரியுமதென்றுரைத்தான்
இந்தமொழிகேட்க னன்செய்வோமென்றிவர்கள்
வேடனேத்தான்போமெனவே வீமன்விசையனுந்தான்
தாடலருந்தர்மரிரு தான்தனிலேபணித்து
விதியேவிதியமக்கோ மேகவண்ணரிப்போது
அதிசயமாளங்களுக்கு ஆளனுப்பிவைத்தகதை
வதோதெரியாது இதுபுதுமைதான்கேட்போம்
சூதாவருடைய சூட்சமோகற்பனையோ
தம்பிநகுலன சகாதேவன்தன்னுடனே
உம்பரேயுந்தமக்கு உரையாமலிச்சேதி
அண்ணருக்குமெந்தனுக்கும் அனுப்பிவைத்தகற்பனைதான்
னண்ணமென்னசாமி இனிமேல்கருமமென்ன

என்றுவிசையன் இவ்வசனந்தான்கேட்க
மன்றுபுகழ்தர்மர் மயங்கிமனமிடைந்து
தம்பிராணவர் சகாயத்தானிப்போது
எம்பிரான்கற்பனைக்கு என்னவென்றுசொல்வேனீ
காரணமாய்க்காணுதிந்த கார்வண்ணர்தன்சேதி
நாரணரைச்சொற்கேட்டு நடந்தோமிதுவரையில்
என்னபிழைவந்தாலும் எதுவகையாலும்
சொன்னமொழிதப்புவரோ சோதனைகாண்தப்பிடாரே
எப்படியோசித்தம் எம்பெருமாள்தானினைவு
அப்படியேயல்லாது அன்றுமுதலின்றளவும்
சொற்படியேநாமும் தொண்டுபண்ணியேதிரிவோம்
விற்பிடித்தசேவகனே வீமனேபுங்கவனே
வலுவுடையராகையினல் வரச்சொன்னருங்கனையும்
மெலியுடையராயிருந்து வீரியத்தைவாங்கிவைக்க
வரச்சொன்னீர்நீங்கள் வழிதுறையாய்கேட்பதற்கு
தரச்சொல்லுதுவார்கையை தானகலநின்றுவிடும்
அகலநின்றுகாரியங்கள் ஆசாரமாய்வணங்கி
சகலகலையறிந்த தாமோதரனிடத்தில்
போய்வாருமென்று பொருத்தவிடைகொடுத்தார்
செயம்போவிருவருமே தென்டனிட்டாரம்மானே
நடந்தார்வனத்தனிலே நாரணரைத்தான்தேடி
தொடர்ந்தார்வனங்களெல்லாஞ் சோலையிலேவந்துகண்டார்
சந்தனச்சோலையிலே தனித்தாலின்கீழேதான்
அந்தருணமங்கே அழுதுபரிதாபம்
தோற்றுதுகாணென்றிருவர் துவளநடந்தோடி
மாற்றலரைவெற்றிகொள்ளு மன்னரிருபேரும்
அந்தவனத்தனிலே அருச்சுனனும்வீமனுமாய்
இந்தவனமொன்றிசைத்தோடிவந்துநின்று
வந்தார்களாலயிடல் மன்னரிருபேரும்
செந்தாமரைக்கண்ணர் தியங்கிமுகம்வாடி
கண்ணருந்தான்மண்மீதில் காயத்துடன்கிடக்க
கண்டார்விழுந்தார் கதறியபயமிட்டார்
விண்டார்மனத்துயரால் விண்ணுமண்ணுந்தானதிர

விருத்தம்

ஐயாகோராமாராமா ஐவரைப்பிரிந்துகானில்
மெய்யதுபுழுதிதாவ மேனியும்திமும்வேரும்
தையவும்வசமோவந்தன் நாமமுமறந்துதாங்கள்

உய்யவோயினிமேற்பாரி லுண்ணவும்வேணுமோதான் (கசு)
காயமும்வருமோவெங்கள் கண்ணுக்கண்ணுனகண்ணு
ஞாயமுமிதுவோஐயா நாங்களுந்தசகிக்கப்போமோ
மாயமாயெய்தாரோ மாயனென்றறிந்திலாரோ
ஆயனேயெய்தாற்சொல்லும்அவனுயிர்கொல்வோமென்றார்.

வேறு.

பார்ப்பார்விழுவாரெழுந்திருப்பார் பழியோகுலையோ முடிந்து தென்பார்; கேட்பார்திருமால்முகம்பார்ப்பார் கெதியோவிதியோ மதியென்பார்; எந்தாரிதுதான்செய்தபிழை செய்தார்சொல்லுமி ந்துயரந், தீர்ப்பார்திருமால்தினைநாளுங்கயிலைக்கடவுளவர்தாமே.)

கதை.

என்றுபுலம்பி இருவருமேதானழுது
குன்றுமலைபோலே குதித்துவிழுந்தது
அழுதுபுரண்டிருண்டு ஐயோ அபயமென்று
புழுதியின்மேல்விழுந்து புலம்பிப்பாதவித்து
பூமியதிரப் புவனமெல்லாந்தானதிர
சுவாமியுந்தன்மீதில் சபத்தொடிக்கவல்லவரார்
தேவாசுரர்களோ இக்குள்ளபாலகரோ
மூவரோஅந்த முனிவராக்கர்களோ
யாவரோவெய்தவர்க ளெடுத்தேயழித்திடுவோம்
தேவரீர்தப்பாமல் செப்புமென்றரம்மானே
கூர்மகளிவிட்டவனைக் கொல்வோங்காண்சொல்லுமையா
அவன்கையில்ம்பா லவனையழித்திடுவோம்
எந்தவிதஞ்சுவாமி இடையூறுவந்ததென்று
அந்தமுள்ளவீமன் அருச்சுனனுந்தான்கேட்க
சுந்தரஞ்சேர்மாயன் சொல்லுவார்நல்வசனம்
வீறுபுகழ்வெற்றியுள்ள வீரருகிருக்க
பாருலகிலுள்ளோரும் பராபரங்கள்மூவோரும்
ஆருமென்மேலேதான் அம்புதொடமாட்டார்கள்
கேளீரருச்சுனரே கிலேசமதைவிட்டுவிடு
மீளாவலுவீமா விசாரங்கள்வேண்டாங்காண்
காலங்கள்தான்முடிந்த கற்பனைபுந்தோற்றுமல்
நூலங்கடந்து நற்பலசதானிருக்க
சீலமுடனுங்களுக்குத் தெரியவேசேதிசொல்வி
எலவந்துகானகத்தில் இருப்போந்தவசனமே
நாமொன்றுதானினைக்க நடவிருந்தான்தன்செயலால்
தாமொன்றுதீதோற்றுமல் சாதகமாய்கூடனின்று
இந்தஉடலுபிரும் எப்போதுந்தானதாய்

சொந்தமெனப்பூவுலகில் சுமந்தலுத்தகாலமெல்லாம்
மெய்யென்றுதாமிருந்தோம் மேதினியேஉண்டெனவே
பொய்யாய்முடிந்ததுகாண் புத்தியுள்ளோர்தான்சேனீர்
மோசம்வருவதற்கு முன்னறியநம்செயலே
பாசம்பிடித்திழுத்தால் பார்க்கவிலக்கமுண்டோ
நாசம்வருங்காலம் நல்லறிவுபோய்விடுமோ
தேசம்மினையாட்டாய் நினைவுதுமோதிவிடும்
வல்லமையாலே வாழ்வதுண்டோபூவுலகில்
நல்லவர்கள்நீங்கள் நமக்குதவிபாகவத்தீர்
பயிருமொருவேலியதாய்ப் பஞ்சவர்கள்நாள்முதலாய்
உயிருமுடலதுபோல் உறவாகித்தாமிருந்தோம்
இப்போதுவந்த இடைபூறுகானகத்தில்
செப்பமுடன்வேடன் சிலையெடுத்துமான்துரத்தி
ஒப்பமுடன்வைத்திடத்தே ஓடிவந்தமானதுபோல்
என்னுருவமான்போல இருந்தபடியாலே
விண்ணுருவவேடன் வில்பிடித்துஎய்துவிட்டான்
வந்துவிழுந்தான் மண்ணும்விண்ணுந்தானதிர
விழுந்தழுதவேடனைத்தான் விரைவிலருகழைத்து
அங்கேபனுப்பிவைத்தேன் அந்தரங்கமாயுமக்கு
இங்கேநீர்வந்தீர் என்துயரர்தீர்ந்துபோ
அம்புபட்டவேதனையை ஆற்றமுடியாது
வம்புபடாத்தேகம் வடுபட்டிருக்காது
ஆனிநரம்பு அறுபட்டுத்தான்போச்சு
பேணியெனைப்பார்த்து பிழைப்பிக்கவல்லீராய்
காயத்தைப்பார்த்து கனைநரம்புதான்பார்த்து
நேயத்துடனே நேராகத்தானிறுத்தி
சோதித்துப்பாருமென்று சொன்னரோமாயவனார்
ஆதித்தன்போலே அருச்சுனனும்விமனமாய்
உள்ளமுருகியொரு உடம்பெல்லாம்புண்ணுமி
கள்ளருந்தான்தர்மர்மொழி கடிந்துரைக்கமாட்டாமல்
கல்லாம்மரமாய் கருத்தசைந்துநின்றார்கள்
எல்லாவிதவசமாய் இப்படியோநீங்களெல்லாம்
நடந்தோதகுமெய்க்க தாமிருந்தகோலமென்ன
கிடந்தோந்தனியே கிட்டவரவேபயந்தீர்
போதாகோயிவ்வளவு புதுமைஅதிசயங்கள்
காதாரக்கேட்டோமே கண்ணாரக்கண்டோமே
இனியார்ச்சதமக்கு இளைப்பற்றவேளையிலே
தனியேபினிமாளச் சங்கரனார்சற்றேனோ

தகையாயிருக்குதுகாண் தம்பியேயிங்கெனக்கு
வகையாயிருக்குதுகாண் வந்திருவர்கைதாரும்
கைதாருமிப்போ கலேயுலேந்துபோகுதுகாண்
மெய்சோர்ந்துயிங்கேநான் விழுமுன்னேகைதாரும்
இப்படியேசொல்ல ஈடழிந்துமெய்சோர்ந்து
அப்படியேநின்றார்கள் அருச்சுனனும்வீமனுமாய்
போகுதடாசீவன் புண்ணுய்க்குலேயுதடா
ஆகுதடாசீவன் அருச்சுனரேவீமரேகேள்
காயம்விழுமுன்னே கையாயுதத்தாலே
நேயமாய்த்தூக்கி நிலத்திலேவைக்கமாட்டீரோ
ஆயுதத்தைதான்காக்கும் ஐவரென்றுசொல்வார்கள்
தாயப்படிகையிலே தான்பார்த்துநிற்பீரோ
நிமிஷம்பொறுக்காது நிர்ச்சீவனுகுதடா
சமையமடாவீமரே தம்பி அருச்சுனரே
என்றுழன்றுமாயன் இப்படியேசொல்லுகையில்
நின்ற அருச்சுனனும் நெடியதொருவீமனுமாய்
தங்கள்தெண்டாயுதமுந் தனுவையுமேநீட்டலுற்றார்
அங்கேயதுவழிபாய் அவர்கள்பலம்வாங்கிவைத்தார்
தண்டுந்தனுவுந் தானெடுக்கமாட்டாமல்

மீண்டுமனமிடைந்து விள்ளாமலுள்ளடைந்து
ஒறுத்துப்பிலங்குறைந்து உள்ளசைந்துமெய்சோர்ந்து
மறுத்துமொன்றுபேசாமல் வலுவிழந்துநிற்பளவில்
கறுத்தகிருமேனி காயாம்புமேகவண்ணர்
வெறுத்துப்புவியை மெய்மறந்துதாதையர்த்து
எங்கெங்குந்தானுகி இருந்தமோரெம்பெருமாள்
பொங்குபுகழ்வைகுந்தம் புரப்புதுந்தார்மாயவனுர்

விருத்தம்.

நீலம்பறத்துவிழிசொருகிநெருப்பும்பறத்துநீர்மேலாய்
கோலம்பெரியவுடல்வேர்த்துக் கோழையுடனேசிலேட்டுமமும்
ஆலம்பெரியமிடறிருகி ஆவியொடுங்கிவதிவசைந்து
சீலம்பெருகுஞ்வைகுந்தஞ்சேர்ந்தாருய்த்தார்செகத்தைவிட்டு(மே
விட்டுப்பிரித்தகிருமாலே வீமன்விசையன்றனெடுத்து
தெட்டுப்புவிலுள்ளடக்கித் துயரத்துடனேவிழுந்தழுது
கட்டுப்பிரிந்தாரெனவேங்கிக் கானந்தனையேவிட்டகன்று
பட்டுப்பறந்துஆயுதத்தைப்பதையாதெடுத்தார்தலேமிதில் (உ)
மாயனேயிழந்தோமென்று மனமெல்லாமிடைந்துபுண்ணுய்
ஆயதோர்தருமர்கேட்கச் சொல்லுவோம்வாருமென்று
ஆயுதந்தலேமேல்வைத்து அருச்சுனன்வீமன்றனும்

தேயமாய்க்கானம்விட்டு நிமிஷத்தில்வருவதானூர் (எ

கதை.

சீரானவைகுந்தந் திருமாலுஞ்சேர்ந்தபின்பு
பேரானபார்த்தன் பெரியவனுமானமுமாய்
மன்னரிருபேரும் மாய்வனர்தம்முடைய
பொன்னடியில்வீழ்ந்து புரண்டுபுரண்டழுது
மண்மேல்விழுந்தழுது மாயோனைக்காணுமல்
விண்வேல்முகம்நோக்கி மெய்சோர்ந்துநின்றழுதார்
நின்றுநின்றுதான்றுதிப்பார் நிலைதளர்ந்துதான்சோர்வார்
மன்றலருமாயோனைவாரியெடுத்தேவிசையன்
கச்சுதோபூமி கசந்துதேதாங்களுந்தான்
மைச்சனரேயென்று வயிற்றிலறைந்தழுதான்
மெய்ச்சுடரேரூப வெளியேவெளிமயக்கே
தச்சரவில்பள்ளிகொள்ளும் நாரணரேயிப்போது
அச்சமில்லாதெங்களுக்கு அலைச்சல்வைத்துப்போனீரோ
மாயத்தால்ஞாதாடி மண்ணிழந்துஅன்றுமுதல்
தாயத்தார்செய்புத் தருக்கைபவரிக்தானே
பாயும்புரைக்கழுவில் பதறிதான்பாயாமல்
தொடர்ந்துவரிவண்டாகி தோயகத்தில்மாயவனே
அடர்ந்துகழுவிருந்த அடையாளங்காட்டினீயே
பார்த்திபர்கள்தன்சபையில் பாஞ்சாலிதன்னையுங்கே
வற்றதுகிலுரிய எம்பெருமாள்கார்த்தீரே
பாராகயென்னிடத்தேர்ப் பாகனுமிந்நின்றீரே
பேராரும்நூற்றுவரைப் பொருந்திபிகவென்றீரே
தனியாமலெங்களுக்காய்த் தரணிதனில்கார்த்தீரே
இனியாரெமைக்காப்பா ரென்றழுதானேவிசையன்
